செம்மணி

நிலம் 3 துகள் 114 வள்ளுவர் ஆண்டு 2052, 24 - 30 புரட்டாதி 2022 வாரமலர் பக்கங்கள் 31

# கொழும்பில் மீண்டும் வந்தன உயர் பாதுகாப்பு வலயங்கள்

கொழும்பின் பல பகுதிகளும் மீண்டும் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன. இது தொடர்பான அரசிதழ் அறிவிப்பு அரச தலைவரால் வெளியிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், உயர் நீதிமன்றம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், அரச தலைவர் செயலகம், அரச தலைவர் மாளிகை, கடற்படைத் தலைமையகம், காவல்துறைத் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் தரைப்படைத் தலைமையகம், தலைமை அமைச்சர் அலுவலகம், அலரிமாளிகை மற்றும் அதனை அண்மித்த பகுதிகள், பாதுகாப்பு செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளின் உத்தியோக பூர்வ இருப்பிடங்கள் ஆகிய பகுதிகள்

பக்கம் 03

# ஐ.நா. பேரவைத் தீர்மானத்தில் அதிகாரப் பகிர்வுக்கு அழைப்பு

## மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் கோரிக்கை

இலங்கையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்கு அழைப்பு விடுத்துள்ளது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படவுள்ள புதிய தீர்மானம்.

சுவிற்சர்லாந்தின் நகரமான ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, கனடா, மலாவி,

பக்கம் 03

### நிலக்கரி இறக்கப்படாவிட்டால்

# நாளுக்கு 10 மணி நேர மின்வெட்டு அபாயம்!

## எச்சரிக்கிறது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியைப் வாங்குவதற்கான கொள்முதல் கட்டளை வெள்ளிக்கிழமை பிறப்பிக்கப்படாவிட்டால் ஐப்பசி (ஒக்டோபர்) 28ஆம் நாளுக்குப் பின்னர் நாளாந்தம் 8 முதல் 10 மணி நேர மின்வெட்டை நடைமுறைப்படுத்தவேண்டி இருக்கும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

இலங்கை மின்சார சபைப் பொறியியலாளர்கள் சங்கமும் இதே எச்சரிக்கையை முன்னர் விடுத்திருந்தது. ஐப்பசி 25ஆம் நாளுக்கு முன்பு நிலகரி இறக்குமதி செய்யப்படவில்லை என்றால் நீண்ட நேர மின்வெட்டுத் தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று அது

பக்கம் 04

# நிலக்கரி வழங்கல் ஒப்பந்தத்தை கைவிட்டது அமைச்சரவை

நிலக்கரி விநியோகத்தை மேற்கொள்வதற்காக கேள்விகோரல் வழங்கப்பட்ட நிறுவனத்தின் ஒப்பந்தம் கைவிடப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

போதிய நிலக்கரி இல்லாத நிலையில் அடுத்த மாத இறுதிப் பகுதி முதல் நாட்டில் 8 மணி நேரத்திற்கும் அதிகமான மின்வெட்டு நடைமுறைப்படுத் தப்படும் ஆபத்து இருப்பதாக எச்சரிக்கப்பட்ட பின்னணியில், அமைச்சரிடமிருந்து இந்தத் தகவல் வந்துள்ளது.

தனது கீச்சகப் பக்கத்தில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், வியாழக்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கேள்வி கோரலை நிறுத்துவது

பக்கம் 04

# தமிழரின் இனப்படுகொலையை பிரிட்டன் அங்கீகரிக்கவேண்டும்

## அந்நாட்டு இரு எம்.பிக்கள் வலியுறுத்து

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை பிரிட்டன் அங்கீகரிக்கவேண்டும் என்று அந்த நாட்டின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது அயலுறவுச் செயலாளரிடம் (அமைச்சர்) வலியுறுத்தியுள்ளனர்.

மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலில் உள்நாட்டு பொறிமுறைகள் தோல்வியடைந்துள்ளன என்பது தெளிவாகியுள்ள விடயம் என குறிப்பிட்டுள்ள அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட இலங்கையின் மூத்த அதிகாரிகளிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அயலுறவுச் செயலாளர் (அமைச்சர்) ஜேம்ஸ் கிலெவெர்லிக்கு எழுதியுள்ள கடிதத்தில் பிரிட்டனின் லிபரல் ஜனநாயக கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற

பக்கம் 04

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# சம்பந்தனை மாற்றுவதால் பயனேதும் உண்டா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் இரா.சம்பந்தனை அகற்றுவதற்கான ஆயத்தங்களில் தமிழ் அரசுக் கட்சி இறங்கியுள்ளது. அதன் தேசிய மாநாட்டில் சம்பந்தனுடன் பக்குவமாகப் பேசி அவரை அனைத்துப் பதவிகளில் இருந்தும் இறக்குவதற்கான குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.
இராஜவரோதயம் சம்பந்தனுக்கு வயதாகிவிட்டது, அவரால் முன்னரைப் போல வினைத்திறனுடன் செயலாற்ற முடியவில்லை, கேட்கும் திறன் குறைந்த காரணத்தால் அவரால் திறம்படக் கலந்துரையாடல்களில் ஈடுபட முடியவில்லை, அவர் செயலாற்ற முடியாமல் உள்ளதால் திருகோணமலை மாவட்டத்திற்கான தமிழ்ப் பிரதிநிதித்துவம் வினைத்திறனோடு இல்லை என்று அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றில் உண்மை இல்லாமல் இல்லை.
ஒரு மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினராக சம்பந்தனின் வினைத்திறன் மழுங்கிப்போய்விட்டது என்பதென்னவோ உண்மைதான். ஆனால், அவர் அந்த மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர் என்கிற வகிபாகத்தை மட்டுமே கொண்டவரா? இல்லை அவர் ஈழத் தமிழ் மக்களின் அதிலும் தமிழ்த் தேசியத்தின் வழி சிந்திக்கக்கூடிய மக்களின் தலைவர். ஒட்டுமொத்தக் கூட்டமைப்புக்கும் அதன் வழியான தமிழர் பிரதிநித்துவத்துக்கும் தலைவர். அப்படியிருக்கும்போது அவரை ஒரு மாவட்டத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினராகக் குறுக்கி குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது அபத்தம். மாவட்டத்துக்காக அவர் ஆற்றவேண்டிய பணிகளை கூட்டமைப்பின் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாராளமாக ஆற்ற முடியும். அதனைச் செய்வதைவிடுத்து சம்பந்தன் அந்தப் பணியைத் திறம்படச் செய்யாதமைக்காக அவரை அகற்றுவது சிறந்த தெரிவு அல்ல.
சம்பந்தனின் வயது மூப்பு அரசியல் களத்தில் ஒரு பின்னடைவு தான் என்கிறபோதும் மற்றொரு பக்கத்தில் அதுவே தமிழர்களுக்குச் சாதகமான பக்கத்தையும் கொண்டிருக்கிறது என்பதையும் அங்கீகரிக்கவேண்டும். இன்று இருக்கும் அரசியல்வாதிகளில் வயதில் மூத்தவர் சம்பந்தன். அதனால் சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகளும் அவர் பேச்சுக்கு செவிசாய்க்கின்ற அனுபவ முதிர்ச்சியை அவர் கொண்டிருக்கிறார். அவரது சொல்லுக்கு மதிப்பளிக்கும் நிலை சிங்கள அரசியல் தலைவர்களிடம் இன்று இருக்கிறது. அவரை மாற்றிவிட்டு இன்னொருவரை அந்த இடத்திற்குப் போடுவதால் இந்தச் சாதகத் தன்மை கிட்டப்போவதில்லை.
மற்றொருவிடயம் நாடாளுமன்றத்தில் உரக்கப் பேசுவதால் திருகோணமலை மாவட்டப் பிரச்சினையல்ல தமிழரின் எந்தப் பிரச்சினையும் தீர்வைக் காணாது என்பது எப்போதோ முடிந்த முடிபு. அப்படியிருக்கும்போது சம்பந்தனை மாற்றி இன்னொருவரைப் போட்டால் திருகோணமலையைக் காப்பாற்றிவிடலாம் என்பது போன்று பேசுவது காதில் பூச்சுற்றும் வேலை. சம்பந்தனுக்கு பதிலாக வருக்கூடிய புதியவர் நாடாளுமன்றத்தில் உரத்துப் பேசி விட்டால் மட்டும் அடுத்த நாளே எதுவும் நடந்துவிடப்போவதுமில்லை. ஒட்டுமொத்தத்தில் சம்பந்தனின் வயதும் அனுபவமும் தரும் பாதகத்தைவிட சாதகம் அதிகமாக இருக்கும் நிலையில் அவரது இடத்தை இன்னொருவரால் நிரப்புவதன் மூலம் அது இழக்கப்படும் அபாயமே இருக்கிறது. எனவே தலைவராக சம்பந்தன் இருக்கும் நிலையில் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கான நாடாளுமன்றப் பணியையும் சேர்த்தே பார்ப்பதே சரியான தெரிவாக அமையும். சம்பந்தனின் வயது மற்றும் அரசியல் அனுபவத்தின் மூலம் தமிழர்களுக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலத்தை அவருடாகப் பெற முழு முயற்சியில் ஈடுபடுவதும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமை.



# காணிகளை விடுவிக்க வலியுறுத்தி போராட்டம்

*மயிலிட்டியில் மக்கள் முன்னெடுப்பு*

பொது மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி, யாழ். மாவட்டம் மயிலிட்டி பகுதியில் வெள்ளிக்கிழமை தினம் கவனவீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.
வலி. வடக்கு முன்கொடியேற்ற சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைந்த குழுவினால் இந்த கவன ஈர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.
கடந்த 30 வருடங்களாக வலி. வடக்குப் பகுதியில் விடுவிக்கப்படாமல் இருக்கும் ஏனைய மூவாயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், மக்களை அவர்களுடைய சொந்த காணிகளில் குடியமர்த்தி அரசு அவர்களுக்கு வீட்டு திட்டத்தினை வழங்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.
எமது பிரதேசத்தில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயங்களினுள் உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
குடியேற்ற நிலங்களும் உயர் பாதுகாப்பு வலயங்களினுள் உள்ளமையால், மக்கள் தொடர்ந்தும் வாடகை வீடுகள், உறவினர்கள் வீடுகளில் வாழ்கின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.
எனவே தங்களின் காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்களால் கோரப்பட்டது.



# பயங்கரவாதச் சட்டத்தை நீக்ககோரி கொழும்பில் கையெழுத்து சேகரிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திரும்பப்பெறும்படி வலியுறுத்தி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி முன்னெடுத்துவரும் கையெழுத்துப் போராட்டம் வெள்ளிக் கிழமை கொழும்பில் மேற்கொள்ளப்பட்டது. கோட்டை தலைமை நீதிவான் மன்றத்திற்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்தின்போது கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினர்களான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் முன்னின்று இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர். சட்டத்தரணிகள், சட்டக் கல்லூரி மாணவர்கள், மதத் தலைவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் தமது கையெழுத்துக்களைப் பதிவு செய்து போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.
காங்கேசன்துறையில் தொடங்கிய இந்தப் போராட்டம் அம்பாந்தோட்டையை அடையும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப சனிக்கிழமை களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் கையெழுத்துச் சேகரிப்புப் போராட்டம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஐ.நா. பேரவைத்...



மொண்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுக ளின் அனுசரணையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வுள்ளது.
மனித உரிமைகள் பேரவை செயலகத்தில் புதன்கிழமை முறைப்படி கையளிக்கப்பட்ட இந்த வரைவு தீர்மானத்திற்கு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி, கனடா, மலாவி, மொண் டினீக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா ஆகிய நாடுகள் அனுசரணை வழங்கியுள்ளன.
'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் புதிய தீர்மான வரைவு மனித உரிமைகள் பேரவைச் செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இந்த வரைவு உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடப் பட்டு திருத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு இறுதி செய்யப் பட்டிருந்தது.
நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் மனித உரிமைகள் தாக்கம் உட்பட இலங்கையின் மனித உரி மைகளின் நிலைமையை கண்காணித்து அறிக்கையிடுவதை மேம்படுத்துமாறு மனித உரிமைகளுக்கான உயர் ஆணை யர் அலுவலகத்தை இந்தத் தீர்மானம் மீண்டும் கோரியுள் ளது.
வரைவின்படி, மனித உரிமைகள் பேரவையின் 53வது அமர்வு மற்றும் 55ஆவது அமர்வுகளில் வாய்வழி அறிக் கைகளையும், அதன் 54வது அமர்வில் எழுத்துப்பூர்வ அறிக்கையையும் மற்றும் அதன் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான மேலதிக தெரிவுகளை உள்ளடக்கிய விரிவான அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு அலுவலகம் கோரப்பட்டுள்ளது.
2024 இல் 57ஆவது அமர்வின்போது முழுமையான விவாதிப்பு இடம்பெறும். 2021 இன் பிற்பகுதியில் இருந்து இலங்கையில் மோசமடைந்துள்ள கடுமையான பொருளா தார நெருக்கடி, கொரோனா தொற்றுநோயால் தீவிரமடைந் துள்ளது மற்றும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் உட்பட இலங்கை மக்கள் மீது இது ஏற்படுத் திய ஆழ மான தாக்கத்தை இந்தத் தீர்மானம் அங்கீகரிக்கிறது.
தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கத்தின் அண்மைக்கால முயற்சிகளை அங்கீகரிக்கிறது மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வ தேச நாணய நிதியத்திற்கும் இடையில் எட்டப்பட்ட பணியாளர் மட்ட உடன்படிக்கையை வரவேற்கிறது.
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, தேசிய காவல்துறை ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழு உள்ளிட்ட முக்கிய ஆணைக்குழுக்கள் மற்றும் லஞ் சம் அல்லது ஊழல் மற்றும் நீதித்துறை நிறுவனங்களின் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே வேளையில் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான அர சாங்கத்தின் உறுதிப்பாட்டை தீர்மானம் அங்கீகரிக்கிறது.
நல்லிணக்கம் மற்றும் அதன் மக்கள் தொகையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் மனித உரிமைகளை முழு மையாக அனுபவிப்பதில் ஒருங்கிணைந்த அரசியல் அதி காரப் பகிர்வு தொடர்பான தனது உறுதிமொழிகளை நிறை வேற்றுமாறு இலங்கை அரசை அது கேட்டுக்கொள்கிறது.
சித்திரை (ஏப்ரல்) 2022 முதல் அமைதியான போராட்டக் காரர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் கைதுகள், அத்து டன் அரச ஆதரவாளர்களுக்கு எதிரான வன்முறை, இறப்பு, காயங்கள், அழிவு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்ட மனித உரி மைகள் மீறல்கள் குறித்து கவலை தெரிவிக்கிறது.
அத்துடன் அனைத்து தாக்குதல்கள் மற்றும் பொறுப்புக் கூறப்பட்டவர்கள் மீதும் சுயாதீன விசாரணைகள் நடத்தப் பட வேண்டும் என்று அறிக்கை வலியுறுத்தியுள்ளது.
இலங்கை அரசு, அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள் வதற்கான தனது அர்ப்பணிப்பை முழுமைப்படுத்தவேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் மனித உரிமைகளை முழுமை யாக அனுபவிக்கவும் நல்லிணக்கத்துடனும் அது ஒன்று கலந்துள்ளது.
அத்தோடு உள்ளூராட்சிக்கு மதிப்பளிக்கப்படவேண்டும் என்று இலங்கை அரசை இந்தத் தீர்மானம் ஊக்குவிக்கிறது.
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி மாகாண சபைகளை வினைத்திறனுடன் இயங்குவதற்கு ஏற்ற வகை யில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட அனைத்து மாகாணங்களுக்குமான தேர்தல்களை நடத்து வதன் மூலம் உள்ளாட்சி அமைப்புக்களுக்கான மதிப்பை அரசு வழங்கவேண்டும் என்றும் தீர்மானம் வலியுறுத்தி யுள்ளது.

## கொழும்பில்...

அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
போர்க் காலத்தில் இந்தப் பகுதிகள் உயர் பாதுகாப்பு வல யங்களாக அறிவிக்கப்பட்டு பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருந்தன. போர் முடிந்த பின்னர் அது நீக்கப் பட்டிருந்தது.
அண்மையில் நடந்த மக்கள் கிளர்ச்சியின்போது இந்த இடங்களிலும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற மையை அடுத்து, தற்போது அவை உயர் பாதுகாப்பு வல யங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் எதிர் வரும் காலங்களில் இந்த இடங்களின் முன்பாகவோ அரு கிலோ போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் செய்வது தடுக் கப்படும்.

## தமிழரின்...

உறுப்பினருமான எட்டேவேயும் ரிச்மன்ட் பார்க்கிற்கான நாடாளுமன்ற உறுப்பினர் சரா ஒன்லேயும் இதனை தெரிவித்துள்ளனர்.
இலங்கை தமிழர்களின் உரிமைகள் அயலுறவுச் செயலாளரின் முன்னுரிமைக்குரிய விடயமாக அமையவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இந்த கடிதத்தைத் தாம் எழுதுகிறார்கள் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இலங்கையின் பொறுப்புக்கூறலிற்கான உள்நாட்டு பொறிமுறை கடந்த சில வருடங்களாக சிதைந்து தோல்வியடைந்துள்ளது என்பது தெளிவாகின்றது.
இலங்கை அரசு தொடர்ந்தும் வழமை போல தாமதப்படுத்தும், மறுக்கும், தப்பிக்க முயலும்.
போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை உரிய முறையில் விசாரணை செய்யவேண்டும், அவர்கள் செய்த விடயங்களிற்கு பொறுப்புக்கூற வேண்டும் என புதிய வெளிவிவகார செயலாளர் இலங்கையின் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்த வேண்டியது.
தனிநபர் ஒருவர் அநீதிகளில், உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்பதற்கான ஆதாரங்கள் காணப்பட்டால் மக்னிட்ஸ்கி தடைகளை பயன்படுத்துவது உட்பட பிரிட்டன் அரசு அவர்களிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
இலங்கை தற்போது அரசியல் பொருளாதார மனித உரிமை நெருக்கடியில் சிக்குண்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். உணவு மருந்து எரிபொருள் போன்றவற்றிற்கான தட்டுப்பாடு மில்லியன் கணக்கான மக்களிற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இலங்கை அரச தலைவரின் தலைமைத்துவம் குறித்து நாங்கள் ஆழ்ந்த ஏமாற்றமடைந்துள்ளோம். அவரது ஆட்சியின் கீழ் இடம்பெறும் ஒடுக்குமுறை குறித்த எங்கள் கரிசனையை எழுப்புகின்றோம்.
இலங்கை மக்கள் சீர்திருத்தங்களிற்காக வீதிகளில் போராடும்போது ஐக்கிய இராச்சியம் அவர்களிற்கு ஆதரவளிக்க வேண்டும், நெருக்கடியின் மனிதாபிமான விளைவுகளிற்கு தீர்வு காணப்படுவதை உறுதி செய்வதற்காக எங்களின் சகாக்களுடன் இணைந்து பிரிட்டன் செயற்படவேண்டும்.
இலங்கையில் தமிழர்களிற்கு எதிரான நீண்ட காலமாகத் தொடரும் மனித உரிமை மீறல்கள் குறித்த எங்கள் கரிசனைகளை நாங்கள் வெளிப்படுத்த விரும்புகின்றோம். பல மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கைகள் உள்நாட்டுப் போரின் அநீதிகளின் பின்னர் இலங்கையில் மனித உரிமை நிலவரம் குறித்த கவலை தரும் நிலவரத்தை வெளியிட்டுள்ளன.
தமிழர்களிற்கு எதிராக இனப்படுகொலை நடவடிக்கைகள் இடம்பெற்றன என்பதை அங்கீகரிக்கும் முக்கியமான நடவடிக்கையை நீங்கள் எடுப்பீர்கள் என நாங்கள் நம்புகின்றோம். பிரித்தானிய அரசு கடந்த கால அநீதிகளை அலட்சியம் செய்யக்கூடாது தற்போது இடம்பெறும் மனித உரிமை மீறல்களையும் நாங்கள் புறக்கணிக்க முடியாது.
இவ்வாறு அந்தக் கடிதம் குறிப்பிடுகிறது.

---

## நாளுக்கு...

எச்சரித்திருந்தது.மின்சார உற்பத்திக்கான நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்கு வாராந்தம் 21 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் ஜானக்க ரத்நாயக்க தெரிவித்தார். தற்போது கையிருப்பில் உள்ள நிலகரி ஐப்பசி 28ஆம் நாள் வரையான பயன்பாட்டுக்கு மட்டுமே போதுமானது என்றும் அவர் தெரிவித்தார்.
போதிய நிலக்கரி கொள்வனவு செய்யப்படவில்லை என்றால் அதன் மூலம் நாளாந்தம் கிடைக்கும் 820 மெகாவோட் மின்சாரம் தடைப்படும். இதனால் 8 முதல் 10 மணி நேர மின்வெட்டை நடைமுறைப்படுத்தும் கட்டாயம் ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
21 கப்பல்கள் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோதும் அதற்குச் செலுத்துவதற்கான பணம் ஆட்சியாளர்களிடம் இல்லை என்று கூறப்படுகின்றது.
நாட்டின் மின்உற்பத்தியில் 30 சதவீதம் நிலக்கரியில் இயங்கும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாகவே கிடைக்கிறது. அங்குள்ள மூன்று ஜெனரேட்டர்களில் ஒன்று ஏற்கனவே பழுதடைந்து திருத்தப்படாமலுள்ளது. இந்த மூன்று மின் பிறப்பாக்கிகளும் முழுமையாக இயங்கினால் நாட்டின் மின்சாரத் தேவையின் 40 சதவீதம் பூர்த்திசெய்யப்படும்.
நிலக்கரியை விநியோகிப்பதற்காகக் கோரப்பட்ட கேள்விப்பத்திரத்தின் வழியாகத் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றுடன் நீண்டகாலத்துக்கான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது இலங்கை அரசு. எனினும் அதற்காக பல நிபந்தனைகளும் விதிக்கப்பட்டிருந்தன. அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டிருந்த குறிப்பிட்ட நிறுவனம் இப்போது அவற்றைப் பூர்த்திசெய்யவில்லை.
அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிகழ்த்துகைப் பிணை (பெர்போர்மன்ஸ் பொண்ட்) செலுத்துவதற்கான கால எல்லை வியாழக்கிழமையுடன் முடிவடைந்தது. இருப்பினும் அந்த நிறுவனம் பிணைத் தொகையைச் செலுத்தவில்லை. இதனால் எதிர்கால நிலக்கரி விநியோகம் கேள்விக்குறியாகி உள்ளது.
தற்போது நிலக்கரியை வழங்கிவரும் நிறுவனம் அதன் ஒப்பந்தப்படி இன்னும் 21 கப்பல்கள் நிலக்கரியை வழங்க வேண்டியிருக்கிறது. ஆனால் அற்கான பணம் செலுத்தப்படாததால் அதுவும் தாமதமாகின்றது.

---

## நிலக்கரி....

என்று முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.
கேள்வி கோரலைப் பெற்றவர் அதன் நிபந்தனைகளுக்கு அமைய விநியோகத்தை மேற்கொள்ள முடியாது என்று தெரிவித்திருப்பதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். நியதிகளுக்கு அமைய புதிய கேள்வி கோரல் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.
நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்காக கடந்த ஆண்டு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட நிறுவனம் விநியோகிக்க வேண்டிய 19 கப்பல் நிலக்கரியை முன்கூட்டியே பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தந்தை செல்வா வழியில் நடக்கும் சம்பந்தனை அகற்றுவது முறையா?

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கிய தந்தை செல்வா இறுதிக் காலத்தில் பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டார். நடக்கும், பேசும், கேட்கும் ஆற்றலை இழந்தார். ஆனால், 79 வயதில் இறக்கும் வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியில் இருந்தார். அவரைப் பின்பற்றியவர்கள் தந்தை காட்டிய வழியில் அரசியல் நடத்துவதாகக் கூறினார்கள். அதை வைத்தே நாடாளுமன்றம் சென்றார்கள். "தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று அந்தத் தந்தை இறுதியாகக் கூறிச்சென்றிருக்க அவரது கருத்துக்கு மாறாக அமிர்த லிங்கமும் ஏனையவர்களும் தமிழ் மக்களைத் தாம் காப்பாற்றுவோம் எனக் களமிறங்கினார்கள். அவர்களால் அது முடியவில்லை. அவர்களைத் தொடர்ந்து இன்று தனது 89ஆவது வயதாகியும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடரும் இரா.சம்பந்தனை அவரது பிரிவிற்கிடையில் அந்தப் பதவியிலி இருந்து அகற்றுவதற்கு ஒரு தரப்பினர் முயன்று வருகின்றனர்.

**விதுரன்**

**சம்பந்தனின் நாடாளுமன்றத் தரிசனம்**

1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்த சம்பந்தன் 1989இல் இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.என்.பி.எல்.எவ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ கூட்டணியில் நின்று திருகோணமலையில் தேர்தலில் போட்டியிட்டார். அதில் தோல்வியடைந்தார். 1994இல் நடந்த தேர்தலில் தங்கத்துரையிடம் தோல்வியடைந்தார். எனினும் 1997இல் நாடாளுமன்ற உறுப்பினரான தங்கத்துரை புலிகளால் கொல்லப்பட்ட பின்னர் அந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் முதல் தடவையாக நாடாளுமன்றம் சென்றார் சம்பந்தன். அதன் பின்னர் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புலிகளின் பின்னூட்டலுடன் 2001, 2004, 2007ஆம் ஆண்டுகளில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரானார்.

போர் முடிந்த அடுத்த ஆண்டுத் தேர்தலில் வென்ற சம்பந்தன் தனது நாடாளுமன்ற உரையில் போரை முடிவுக்குக் கொண்டு வந்த தற்காகவும், ஜனநாயக ரீதியில் அரசியல் நடத்தவும், கொழும்பில் இருந்து திருகோணமலைக்குப் போய்வருவதற்கான பாதுகாப்பான வாய்ப்பை ஏற்படுத்தியதற்காகவும் அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு நன்றி கூறினார். 2015

**வயோதிபர் நிலையிலிருக்கும் சம்பந்தன் 2020இல் திருகோணமலைத் தொகுதித் தேர்தல் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும்போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் திருகோணமலை மக்களுக்குப் பரீட்சயமில்லாத, திருகோணமலை மாவட்டத் தில் பிரபல்யம் இல்லாதவர்களைப் பெயரிட்டார்.**

தேர்தலில் 33,834 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற சம்பந்தன் 2020 பொதுத்தேர்தலில் 21,422 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

**வேட்பாளர் பட்டியல் சூழ்ச்சி**

வயோதிபர் நிலையிலிருக்கும் சம்பந்தன் 2020இல் திருகோணமலைத் தொகுதித் தேர்தல் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும்போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் திருகோணமலை மக்களுக்குப் பரீட்சயமில்லாத, திருகோணமலை மாவட்டத் தில் பிரபல்யம் இல்லாதவர்களைப் பெயரிட்டார். இதனால் தனக்கான வாக்குகளை அதிகமாகப் பெற்றுக்



கொண்டார் என்றொரு கருத்து உண்டு. வேட்பாளர்களில் சம்பந்தரை மட்டும்தானே எங்களுக்குத் தெரியும் என்று திருகோணமலை மக்கள் கூறுவதாக இருந்த நிலை விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவருக்குச் சாத கமாக இருந்தது.

**மாவையின் அரசியல்**

சோமசுந்தரம் சேனாதிராசா எனும் இயற்பெயரைக் கொண்ட மாவை சேனாதிராசா நீண்ட காலமாக இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து வருகிறார். 1989 இல் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றார். 1989 ஜூலை 13இல் அமிர்தலிங்கம் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் முதற் தடவையாக நடாளுமன்றத்துக்குச் சென்றார். தந்தை செல்வாவுக்குப் பின்பாக அரசியல் களத்தில் நின்ற அமிர்தலிங்கம் 1970 பொதுத் தேர்தலில் தனது வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோல்வியடைந்த பின் 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அறிவித்தார். அதன் பின்னர் 1977 பொதுத் தேர்தலில் வட்டுக் கோட் டைத் தொகு தியில் போட்டியிடுவதைத் தவிர்த்துக் காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் போட்டி யிட்டார். 1989இல் இந்தியப் படையினர் நிலை கொண்டிருந்த போது யாழ்ப்பாணத்தில் போட்டி யிட முனைந்தார். வரதராஜப் பெருமாள் அணி யினர் எதிர்ப்புத் தெரி வித்ததால் மட்டக்களப் பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். அதன் பின்னர் தேசியப் பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

இந்தியப் படையினர் இலங்கையை விட்டு வெளியேறினால் தமிழருக்குப் பாது காப்பு இல்லை என்ற இரகசிய ஒப்பந்தம் ஒன்றில் இந்திய ராஜதந்திரி தேஷ் முகேயுடன் கொழும்பில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய விருந்த நிலையிலேயே புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டார் என்றும் சொல்லப்படுகின் றது. அதன் பின்னர் 10 வருடங்கள் கழித்து 1999 ஜூலை 29 அன்று நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டதால் மாவை மீண்டும் நாடாளுமன்றம் செல்லச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பின்னர் 2000, 2004, 2010, 2015 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் மக்களின் வாக்குகளுடன் நாடாளுமன்றம் சென்றார். 2020 தேர்தலில் மக்களால் தோற்கடிக்கபட்டார். இதனால் சாகும் வரை நடாளுமன்ற உறுப்பினராக இருக் கும் வாய்ப்பை அவர் இழந்தார். ஆனால் சம்பந்தன் அந்த வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

**வாரிசு அரசியல் இல்லை**

தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சம்பந்தன் ஆகி யோர் தமது பிள்ளைகளை அரசியலுக்குக் கொண்டு வரவில்லை. மாவை சேனாதிராசா தனது மகனைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணிக்கூடாக அரசியலுக்கு அழைத்து வந்திருக்கிறார். அதனால் ஒருவேளை மக னுக்கு வழிவிட்டு மாவை அரசியலில் இருந்து ஒதுங் கக்கூடும். அதற்கு முன்பாக சம்பந்தனை யும் அகற்றி வழியை அகலத் திறப்பதற்கு தமிழ் அரசுக் கட்சிக்குள் இப்போது சிலர் முயற்சிக் கின்றனர்.



75



தர்மராசா

# உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நம்பிக்கையிழந்த கைதிகள்

**6.4.2002** அன்று களுத்துறைச் சிறையின் ஈ வார்ட்டில் **10.4.2002** தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவிருப்பதற்கு **5** கைதிகள் உத்தேசித்திருந்தனர். பி-**6** காம்பறாப் பாட்டியான அப்பன் இரவு கைதிகளைப் பூட்டிய பின் இதை அறிவித்தார். நானும் அந்த வார்ட்டிலேயே இருந்தேன். இந்த உணவு தவிர்ப்புப் போராட்ட விடயம் எனக்குப் புது அனுபவம். ஒரு சில நாள்களுக்கு முன்னர்தான் நான் பி-**6** வார்ட்டுக்கு மாற்றப்பட்டிருந்தேன் என்பதால் எனக்கு இடமும் புதிது. இதனால் அமைதியாக இருந்து எல்லாவற்றையும் அவதானித்தேன்.

"ஏன் உண்வைத் தவிர்க்கிறார்களாம் இருக்கிறார்களாம்..." என்று ஒரு கைதி கேட்டார். அதற்குக் கம்பறாப் பாட்டி அப்பன் சொன்னார், "வழக்குகளைச் சொந்த இடங்களுக்கு மாற்றித் தரும்படி கோரிக்கை" என்று. அந்தக் கோரிக்கைக்கு பி-**6**இல் அப்போதிருந்த **30** கைதிகளில் யாருமே ஆதரவளிக்கத் தயாராக இருக்கவில்லை. "உண்வைத் தவிர்த்து உடலை வருத்துவதைவிட வேறு ஒன்றும் கிடைக்கப்போவதில்லை" என்று ஒரு கைதி சொன்னார். "தடயப் பொருள்கள் உள்ள வழக்குகளை நீதிமன்ற விசாரணை இன்றி அரசு ஒருபோதும் விடுவிக்கப்போவதில்லை. அதற்கு உணவைத் தவிர்த்துப் பயனில்லை" என்றார் மற்றொரு கைதி.

"ஜெயலத் ஜெயவர்த்தன களுத்துறைச் சிறைக்கு வந்து உண்வைத் தவிர்ததவர்களிடம் அதைக் கைவிடுமாறு கேட்டார். அது நடந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. இந்த மாதம் **5**ஆம் திகதி தொடக்கம் **24**ஆம் திகதி வரை நீதிமன்றங்கள் விடுமுறைக்காலம் என்பதால் இப்போது உணவைத் தவிர்த்துப் போராட உகந்ததல்ல" என்று இன்னோர் கைதி சொன்னார். "**5**ஆம் மாதம் முடியும் வரை பொறுத்திருந்து பார்ப்போம். கைதிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் நிலை இல்லாவிட்டால் **6**ஆம் மாத தொடக்கத்தில் எல்லோரும் சேர்ந்து உண்ணவு தவிர்ப்புப் போராட்டத்தை தொடங்குவோம்" என்றார் மற்றொரு கைதி.

"அடிக்கடி உண்ணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஒருவர் இருவர் என குதித்து அவர்களின் உடல் நிலை கவலைக்கிடமாக இருக்கும்போது அவர்களுக்கு ஆதரவாக எங்களையும் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டால் நான் அதற்குச் சம்மதிக்கப்போவதில்லை" என்றார் மற்றொரு கைதி. 'பட்டினிப் போராட்டம் பிசகி விட்டால் நான் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் போய்த் தங்கிவிடுவேன்" என்றார் மற்றொருவர்.

மேற்படி வாதப் பிரதிவாதங்கள் அனைத்தும் உண்மையானவையும் நியாயமானவையும் ஆகும்.

# இனிவரும் தேர்தலுக்குப் பேசுபொருள் தேடும் தலைவர்கள்

நியூட்டன்

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மத்தியில் மிகக் கடுமையான போட்டி நிலவுகிறது. தமிழருக்கு அரசியல் தீர்வு ஒன்று கிடைத்துவிட்டால் 'மறுநாளே நாங்கள் மலையைப் பேர்த்து மாமரத்தில் சாத்தி விடுவோம்'' என்ற பாணியில் இதுவரை காலமும் கூறினார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனோ புதுவருடத்துக்குத் தீர்வு வரும், தீபாவளிக்கு, தைப்பொங்கலுக்குத் தீர்வு வரும் என மாறி மாறிக் கதைவிட்டுத் தமிழ் மக்களை ஏமாற்றினார். தற்போது கூட்டமைப்புக்குள்ளேயே சித்தார்த்தன் ஒரு கதை, செல்வம் அடைக்கலநாதன் ஒரு கதை. சுமந்திரன் ஒரு கதை, சிறிதரன் ஒரு கதை என்று பல கதைகள் கிளம்பிவிட்டன.

தற்போது தமிழ்த்தேசியக் கட்சிகளுக்குள்ளும் தலைவர்களுக்குள்ளும் உள்ள போட்டி இனி வரும் தேர்தலுக்குப் பேசுபொருளாக எதைக் கையிலெடுப்பது என்பதேயாகும். இதற்குப் பல தளங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஜெனீவா மனித உரிமை ஆணையகப் பிரச்சினை, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் கைதிகளை விடுவித்தல், படையினரிடமிருந்து காணிகளை மீளப்பெறுதல், குருந்தூர், திருக்கோணேஸ்வர ஆக்கிரமிப்பு மீட்சி, சீன - இந்திய ஊடுருவல், மோடி எங்களுடன்தான் நிற்கிறார், பன்னாட்டுகள் எமக்குப் பின்னால் வரிசை கட்டி நிற்கின்றன, புலிகள் எம்மைக்கேட்டுத்தான் போராடினார்கள், நாங்களும் புலிகளும் ஒன்று எனப் பல்வேறு விடயங்களைக் கையிலெடுத்து ஒவ்வொருவரும் ஒருவரின் முகத்தை மற்றவர் பார்க்காதபடி நவக்கிரக நிலையில் காட்சி தருகின்றனர்.



**சுமந்திரனின் தேர்தல் நோக்கிய குறி**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான ஊர்வலம், முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரையான கடல்வழிப் போராட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான கையெழுத்து வேட்டை எனப் பலவற்றைச் செய்து முடித்துத் தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிப்பதற்காக மாவிட்டபுரத்திலிருந்து அம்பாந்தோட்டை வரையான கையெழுத்து ஊர்திப் போராட்டம் என்று ஒவ்வொரு போராட்டமாக அவர் தொடர்ந்து தன்னை ஒரு பேசு பொருளாக வைத்திருக்கிறார். இதில் முக்கியமானது என்னவென்றால் சிங்களத் தரப்புடன் பேசி அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டுவருவதற்காகவே அரசியலில் களமிறக்கப்பட்டவர் சுமந்திரன். ஆனால் அவரது அந்த முதன்மைப் பணியை அவரால் திறம்படச் செய்ய முடியாமல் போகவே அதை அடைவதற்கானது என்று போராட்டங்களில் அவர் குதிக்கிறார். அவர் மட்டுமல்லர், அரசியல் தீர்வு விடயத்தில் மக்கள் மத்தியில் இறங்கத் திராணி இல்லாத நிலையில் ஏதாவது புதிய விடயத்தைக் கையிலெடுத்துக்கொண்டு மக்கைள அதன் வழி திசை திருப்ப முயன்றுகொண்டிருக்கிறார்கள் தமிழ்த் தலைவர்கள்.

---

கைதிகள் பட்ட அனுபவத்தின் வெளிப்பாடே இவையாகும். உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பலர் முழுமையான உடல் நலக் குறைவு, நிரந்தரமான இயலாமை போன்ற நிலைகளை இதற்கு முன்னர் அடைந்திருக்கிறார்கள். இதில் ஒரு பொதுத் தீர்மானத்துக்கு வருவது என்பது கைதிகளின் மன நிலையுடன் சம்பந்தப்பட்டிருந்ததால் அது மிகவும் சிக்கலான ஒரு விடயமாக இருந்தது.

7.4.2002 அன்று களுத்துறைச் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடப்பது பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளியாகின. வீரகேசரிப் பத்திரிகையில் திலீபன், அன்னை பூபதி பாணியில் சிறைச்சாலைகளில் சாத்வீகப் போராட்டம் வெடிக்கலாம் என்ற செய்தி வெளியாகியிருந்தது. நான் இருந்த வாட்டில் அதற்கான எந்த ஏற்பாடுகளையும் காணமுடியவில்ல. ஈ பிரிவின் ஆதரவு அந்தப் போராட்டத்துக்கு இல்லை என்பதே அதன் அர்த்தம்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன சிறைச்சாலைக்கு வந்து கைதிகளிடம் 3 மாதத் தவணை கேட்டார். அதற்கான இறுதி எல்லை 5ஆம் மாதக் கடைசியில் முடிவதால் அதன் பின்னர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் முழு அளவில் ஈடுபடுவதே நல்லது என்பதாகப் பலரது அபிப்பிராயம் இருந்தது. ஈ பிரிவினருடன் கலந்தாலோசிக்காமலேயே ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று புரிந்தது.

8.4.2002 அன்று மாலையில் ஒரு செய்தி அறிந்தேன். சில கைதிகள் 10ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போகின்றனர். பி பிரிவினரும் அதற்கு ஆதரவளிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இதுவிடயத்தை ஆராய்வதற்காகப் பி-6 பிரிவில் கூட்டம் கூடினார்கள்.

(தொடரும்)



**சிறிதரன் மற்றும் சித்தார்த்தன்**

சிங்கள அதிகாரிகளைத் தமிழ்ப் பிரதேசத்தில் நியமிப்பது, பளையிலுள்ள காணிகளைப் படையினர் கையகப்படுத்துவது, போரின் பின்பான தமிழ்ப் பிள்ளைகளின் மந்த போசனை நிலை எனப் பலவற்றைக் கையிலெடுத்திருக்கிறார் சிறிதரன். கிளிநொச்சி மக்களின் வாக்குகளை எவ்வாறு தக்க வைத்துக்கொள்வது என்பது மட்டும்தான் இவரது பெரிய பிரச்சினை. ரணில் ஆட்சியில் தமிழ் மக்களுக்குத் தீர்வில்லை என்பதைப் புதிதாதகக் கண்டுபிடித்திருக்கிறார் சித்தார்த்தன். அதைவிடப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாது செய்தால் சிறைக் கைதிகளின் விடுதலைக்குத் தடையான பிரச்சினைகள் எல்லாமே சுலபமாக முடியும் என்கிறார்.

**சுரேஷ்பிரேமச்சந்திரனும் விக்னேஸ்வரனும்**

பன்னாட்டு விசாரணையை ஒருபோதும் கைவிடப் போவதில்லை, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறார் சுரேஷ்பிரேமச்சந்திரன். தவிர அதற்கான மக்கள் மயப்பட்ட செயற்பாடுகளில் அவர் இறங்கவில்லை. சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் என்ன குற்றத்துக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைப் புதிதாகக் கேட்டிருக்கிறார் விக்னேஸ்வரன். தொடர்ந்தும் அவர் கொழும்பில் வசிப்பதற்கு ஒரு மார்க்கத்தை அல்லது நியாயத்தைக் கூறவே இந்த விடயத்தைக் கையிலெடுத்திருக்கிறார்.



ஒரு நபருக்கு எதிராக வழக்குத் தொடர்வது சட்டமா அதிபர் திணைக்களம் என்பது முன்னாள் நீதிபதிக்குத் தெரியாத விடயமல்ல. அவர் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குச் சென்று கைதிகளின் விவரத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். சிறைக் கைதிகளை விடுவிப்பதில் அவருக்கு அக்கறை இருந்தால் எப்போதோ களமிறங்கி ஒவ்வொருவராக விடுவித்திருந்ததாலே இப்போது சிறையில் எவரும் இருந்திருக்க மாட்டார்கள். இதைவிட இன்னோர் கதையையும் அவிழ்த்து விட்டிருக்கிறார். தற்போது இலங்கையில் நடக்கும் ஆட்சி போர்க் குற்றவாளிகளால் நடத்தப்படுகிறது என்று ஐ.நா சபையை நோக்கிக் கத்துகிறார். 2013இல் வடக்கு மாகாணசபை முதலமைச்சராகத் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பின் அப்போதைய அரச தலைவரான மகிந்த ராஜபக்ச முன்னிலையில் சதத்தியப்பிரமாணம் செய்து அவரால் வழங்கப்பட்ட பிள்ளையார் சிலையை வாங்கியபோது மகிந்தராஜபக்ச போர்க்குற்றவாளி என்று விக்னேஸ்வரனுக்குத் தெரிந்திருக்கவில்லை, இப்போது ராஜபக்சக்கள் மறைமுகமாக ஆட்சியைக் கட்டுப்படுத்தும்போதுதான் இந்தவிடயம் அவருக்குத் தெரியவந்திருக்கிறது.

**மணிவண்ணனின் அரசியல்**

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வராகியபின் பல அபிவிருத்தி வேலைகளை வேகமாக நிறைவேற்றினார் மணிவண்ணன். அது மக்களுக்கு நன்மையாக இருப்பினும் தமிழ் அரசியல்வாதி களுக்கு ஒவ்வாமையைக் கொடுத்தது. மணிவண்ணனின் அண்மைய கனடாப் பயணம்கூடத் தமிழ் அரசியல்வாதிகளின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. குறிப்பாகக் கஜேந்திரகுமார், செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்குத் தலையிடியைக் கொடுத்திருக்கிறது. இதைவிடப் புலிகளின் நினைவேந்தல்கள், மாவீரர் தினம், திலீபன் நினைவு தினம் ஆகியவற்றை முன்னின்று நடத்துவது, புலிகளின் காவல்துறைச் சீருடையில் பணியாளர்களை இறக்கிப் புலிகளின் பாணியில் நிர்வகிக்கிறோம் எனக் காட்டியது எல்லாம் அடுத்த தேர்தலுக்கான மணிவண்ணனின் முன்னேற்பாடுகளே. இவற்றால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் என்றால் எதுவுமில்லை என்பதே பதில். இப்போது திலீபனின் நினைவு தினத்தில் கஜேந்திரகுமார் அணியும் மணிவண்ணன் அணியும் முரண்பட்டுள்ளன. எனினும் அதிகாரத்தைத் தன்வசம் வைத்திருப்பதால் அதைப் பயன்படுத்தித் திலீபனின் நினைவு தினத்தையும் தனவசப்படுத்த அவர் முயன்றுகொண்டிருக்கிறார். இது திலீபனின் கொள்கையை மக்களிடம் எடுத்துச்சென்று விழிப்புணர்வூட்டுவதற்காக அல்ல, நான்தான் புலிகளைத் தூக்கிக் கொண்டாடுகின்றேன் என்று மக்களிடம் காட்டி அவர்களின் வாக்குகளைக் கவர்வதே நோக்கம். கஜேந் திரனின் நோக்கமும் அதுதான் என்பதால்தான் இருவரும் முட்டி மோதிக்கொள்கிறார்கள்.



**சாணக்கியனின் நிலை**

சாணக்கியனின் அரசியல் கூட்டமைப்புக்குள்ளேயே தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. சிங்களமும் தமிழும் கலந்த என்ற அவரது குடும்ப நிலையும் சிக்கலுக்குக் காரணம். சுமந்திரனின் மகன் சிங்களக் குடும்பத்தில் திருமணம் செய்திருப்பதும் விக்னேஸ்வரனின் புதல்வர்கள் சிங்களக் குடும்பங்களில் திருமணம் செய்திருப்பதும்

12

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக் கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வரு கின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண் பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக் கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்க ளும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம் பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப் பதற்காக வும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்ப டையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத் தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன் மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல்வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீ கத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவ துடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை யும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப் பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டு மல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதி யில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம் மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற் சியே.

இந்த வாரச் சொல்

### ''சிலாவல்''

யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் "சிலாவல்" என்ற சொல் வினைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. "அந்தப் பாத்திரங்களை உரஞ் சிக் கழுவத் தேவையில்லை. சும்மா தண்ணியை விட்டுச் சிலாவி ஊத் தினால்போதும்" என்று பேசிக்கொள்வது அதிகம். சிலாவுதல் என்பது இங்கு நுணுக்கமாக இல்லாமல் மேலோட்டமாகப் பாத்திரங் களைக் கழுவிக்கொள்ளுதல் என்று அர்த்தப்படுகிறது.

'கோதுமை மாவைக் கரைத்து நாலு சிலாவு தோசை ஊற்றினால் போதும்" என்பதில் சிலாவுதல் என்பதன் அர்த்தம் மெலிதாக - தடிப் புக் குறைவாகத் தோசை சுடுதல் என்பதாக அமையும்.

'படை முகாமில் இருந்து போக்கஸ் லைற்றைச் சிலாவிப் பிடிச் சாங்கள் நான் பயந்துபோனன்", "துப்பாக்கியால் சுட்டவங்கள் இலக் கில்லாமல் சிலாவிச் சுட்டதால்தான் பலருக்குக் காயம் வந்தது", "அவற்ற கதைய நம்பேலாது அவர் ஒரு சிலாவல் கதைக்காரன்", "பசளை காணாமல் போச்சுது, இருந்த கொஞ்சத்தைச் சிலாவி எறிஞ் சனானன்" என்கிற பேச்சுக்களில் எல்லாம் பலவித அர்த்தங்களுடன் இந்தச் சிலா வல் என்கிற சொல் யாழ்ப்பாணத்தவர்களால் பயன்படுத்தப்படுகிறது.



தமிழ் மக்களைப் பொறுத்த வரை முகம் சுழிக்கும் விட யங்களே. சாணக்கியன் ஏற் கனவே வெற்றிலைச் சின் னத்தில் தேர்தலில் போட் டியிட்டுவிட்டுத் தற்போது கிழக்கில் தானே தமிழ்த் தேசியத் தலைவர் என்பதும் பிரச்சினையாக உள்ளது.

**மக்களின் நிலை**

மூப்புக் காரணமாகத் தனது தொகுதியான திரு கோணமலைக்குச் சம்பந் தன் செல்வதில்லை. இடைக் கிடையே யாழ்ப்பாணம் சென்று அறிக்கை விடுகி றாரே தவிர மக்களின் பிரச் சினையை நேரில் சென்று விக்னேஸ்வரனும் பார்ப்ப தில்லை. எரிபொருள் நெருக்கடியின்போது தமி ழ்த் தேசியத் தலைவர்கள் தமக்கு வாக்களித்த மக்க ளைத் திரும்பியும் பார்க்க வில்லை. அவர்கள் இன் றும் அறிக்கைகளையே நம் பியிருக்கின்றனர். நாளை எந்தத் தலைப்பில் பேசவுள் ளார்கள் என்பது பாவம் அவர்களுக்கே தெரியாது. போதைப் பொருள் பாவ னையில் முக்கிய சூத்திர தாரிகளாக இருக்கும் தமிழ்ச் சட்டத்தரணிகளைக்கூட இவர்களில் யாரும் கண்டித் ததாக இல்லை. தமது பிரச் சினைகளுக்கான தீர்வு எதுவும் தமது தலைவர் களின் கைகளில் இல்லை என்பதைத் தமிழ் மக்கள் பட்டுணர்ந்துகொண்டுள் ளார்களாயின் இனிவரும் தேர்தலில் அதன் பிரதிப லனை இந்தப் போலித் தேசிய அரசியல் தலைவர் களும் அனுபவிக்கவே செய்வர்.

# நுரையீரல் புற்றுநோயைத் தடுப்பது எப்படி?

கணேசன்

புற்றுநோய் பாதிப்பில் உலக அளவில் தொடர்ந்து முதலிடம் வகிப்பது, நுரையீரல் புற்றுநோய். மற்றப் புற்றுநோய்களைப் போலவே, நுரையீரல் புற்றுநோயும் அதன் அடிப்படை செல்களிலிருந்துதான் உண்டாகிறது. புற்றுநோயை உருவாக்கும் காரணிகளால் இந்த



செல்கள் தொடர்ந்து தூண்டப்படும்போது, அவை தம் இயல்பான வளர்ச்சிப்படிகளில் இருந்து விலகி, தவறான, கட்டுப்பாடில்லாத வளர்ச்சிநிலைகளுக்குச் சென்றுவிடுகின்றன. இதனால் அந்த செல்கள் புற்றுசெல்களாக மாறி விடுகின்றன. அவை உருவாக்கும் கட்டிகள் புற்றுக்கட்டிகளாக வளர்கின்றன. இவையே 'முதன்மை நுரையீரல் புற்றுக் கட்டிகள்' (Primary Lung Cancer) என்று அழைக்கப்படுகின்றன.

**என்ன காரணம்?**

நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கு முதல் காரணமாகவும் முக்கியக் காரணமாகவும் இருப்பது ஆண்களின் ஆறாவது விரல் என அழைக்கப்படும் பீடி, சிகரெட், சிகார் புகைப் பழக்கம் மற்றும் புகையிலை பயன்படுத்தும் பழக்கமும்தான் என்கிறது உலக சுகாதார நிறுவனம். புகைப்பழக்கம் உள்ளவர்களில் 90% பேருக்கு இந்தப் புற்றுநோய் வருவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும், புகைப்பவருக்கு அருகில் இருக்கும் குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோரும் அந்தப் புகையைச் சுவாசிக்க நேர்ந்தால், அவர்களுக்கும் நுரையீரல் புற்றுநோய் வரும் வாய்ப்பு அதிகரிக்கிறது. 100 பேரில் 3 பேருக்கு இவ்வாறாக நுரையீரல் புற்றுநோய் வருகிறது.

வாகனப்புகை, தொழிற்சாலை புகை, கரிப்புகை, கட்டுமானப் புகை உள்ளிட்ட மாசு கலந்த காற்றைச் சுவாசிக்கும் வாய்ப்பு அதிகமுள்ளவர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பும் அதிகரிக்கிறது. காரணம், நாம் சுவாசிக்கும் காற்றில் மாசுத் துகள் 2.5 அளவுக்கு (PM 2.5) அதிகமென்றால் அது தினமும் ஒரு சிகரெட் புகைப்பதற்கு சமம். இது தவிர, ஆஸ்பெஸ்டாஸ், ஆர்செனிக், நிக்கல், குரோமியம், யுரேனியம், தார், ரேடான், இரும்புச் சுரங்கம் போன்ற தொழில்துறைகளில் பணிபுரிவோருக்கு நுரையீரல் புற்றுநோய் தாக்கும் ஆபத்து உண்டு. அதிகமாக மது அருந்துவோருக்கும் இந்த ஆபத்து ஏற்படுவது உண்டு. வம்சாவளியிலும் இந்த நோய் வருவதுண்டு. நாற்பது வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இந்த வழியில்தான் நுரையீரல் புற்றுநோய் வருகிறது.

**உணவும் நுரையீரல் புற்றுநோயும்**

நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கு சில உணவுகளும் காரணமாகின்றன என்பது தெரிய வந்துள்ளது. குறிப்பாக, பீட்டா கரோட்டீன் என்னும் வைட்டமின் ஏ சத்து குறைந்த உணவைத் தொடர்ந்து சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கு இந்த நோய் ஏற்படுவது அதிகரிக்கிறது. விலங்கின இறைச்சிகளையும் சீஸ், வெண்ணெய் போன்ற பால் பொருள்களையும் அளவுக்கு அதிகமாக உண்ணும் பழக்கம் உள்ளவர்களுக்கும் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகிறது.

அதேநேரத்தில் கேரட், ஆப்பிள், தக்காளி, பூசணி, வெங்காயம், வாழைப்பழம், பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்வோருக்கு நுரையீரல் புற்றுநோய் வருவது தடுக்கப்படுகிறது என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. கேரட்டில் உள்ள பீட்டா கரோட்டீன், தக்காளியில் உள்ள லைக்கோபீன், ஆப்பிளில் உள்ள ஃபிளவினாய்டுகள், பச்சைக் காய்கறிகளில் உள்ள ஐசோதயோசயனேட்டுகள் போன்றவை புற்றுநோய் செல்களை

அழிக்கும் தன்மை கொண்டவை என்பதால், இந்த நன்மை கிடைக்கிறது.

**அறிகுறிகள் என்னென்ன?**

நுரையீரல் புற்றுநோய்க்கான அறிகுறிகள் இரண்டு விதமாக உண்டாகின்றன. ஒன்று, முதன்மை நுரையீரல் புற்றுநோய் காரணமாக ஏற்படுவது. இரண்டாவது, உடலில் மற்ற இடங்களிலிருந்து புற்று செல்கள் நுரையீரலுக்கு வந்து நுரையீரல் புற்றுநோயை உண்டாக்குவதால் (Secondary lung cancer) ஏற்படுவது.

நாட்பட்ட இருமல், நெஞ்சு வலி, சுவாசிப்பதில் சிரமம், இருமலில் குருதி, சளியில் குருதி, பசி குறைவது, உடல் எடை குறைவது, தொடர்ந்து களைப்பாக இருப்பது போன்ற அறிகுறிகள் சாதாரணமாகவும் இருக்கலாம்; நுரையீரல் புற்றுநோயின் முதல்கட்ட அறிகுறிகளாகவும் இருக்கலாம். சாதாரணம் என்று அலட்சியப்படுத்தாமல் மருத்துவப் பரிசோதனைகளைச் செய்துகொண்டால், நுரையீரல் புற்றுநோயை தொடக்கத்திலேயே கைது செய்துவிடலாம்.

**என்னென்ன பரிசோதனைகள் உள்ளன?**

மார்பு எக்ஸ்-ரே, சி.டி. ஸ்கேன் பரிசோதனைகளில் நுரையீரல் புற்றுநோய் இருப்பதைக் கண்டுபிடிக்க முடியும். சிலருக்கு, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அல்லது பெட் ஸ்கேன் தேவைப்படலாம். இந்த இரு பரிசோதனைகளும் நுரையீரல் புற்றுநோய் எந்த நிலையில் (Stage) உள்ளது என்பதையும் காட்டிவிடும். நுரையீரல் புற்றுநோய்க்குத் தரப்படும் சிகிச்சை பயன் தருகிறதா, இல்லையா என்பதையும் இந்தப் பரிசோதனைகளில் தெரிந்துகொள்ள முடியும்.

**திசுப் பரிசோதனை**

நுரையீரல் புற்றுநோய்க்கு திசு ஆய்வுப் பரிசோதனை (Biopsy) முக்கியமானது. அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் அல்லது சி.டி. ஸ்கேன் உதவியுடன் புற்றுநோயுள்ள உறுப்பிலிருந்து சிறிதளவு திசுவை வெட்டி எடுத்துப் பரிசோதிப்பார்கள். இதில் புற்றுநோயின் இருப்பிடம், வகை, நிலை போன்ற பல தகவல்கள் தெரிந்துவிடும்.

நுரையீரல் புற்றுநோயில் 'சிறு செல் வகை' (SCLC) என்றும் 'சிறு செல் அல்லாத வகை' (NSCLC) என்றும் இரு வகை உண்டு. சிறு செல் அல்லாதவற்றில் அடினோ வகை, ஸ்குவாமஸ் வகை என உட்பிரிவுகளும் உண்டு. பாதிக்கப்பட்ட நோயாளிக்கு எந்த வகை புற்று, எந்த நிலையில் உள்ளது என்பதை உறுதிசெய்த பிறகு, சிகிச்சைமுறை தேர்வு செய்யப்படும்.

**என்னென்ன சிகிச்சைகள் உள்ளன?**

நெஞ்சக அறுவை சிகிச்சை நிபுணர், புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர், கதிர்வீச்சு மருத்துவ நிபுணர் ஆகியோர் அடங்கிய நிபுணர் குழு நோயாளியை ஆராய்ந்து நோயின் நிலையைக் குறிக்கின்றனர். அதற்கேற்ப அவருக்குத் தேவையான சிகிச்சைமுறையைத் தேர்வு செய்கின்றனர்.

முதல் கட்டத்தில் அல்லது இரண்டாம் கட்டத்தில் நோய் இருந்து, நோயாளி அறுவை சிகிச்சைக்கு ஏற்றவராக இருந்தால், அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும். அதைத் தொடர்ந்து, 'ஹீமோதெரபி' என்னும் மருந்து சிகிச்சையும் கதிர்வீச்சு சிகிச்சையும் வழங்கப்படும். அறுவை சிகிச்சைக்கு ஏற்ற உடல்நிலை நோயாளிக்கு இல்லையென்றால், மருந்து சிகிச்சையும் கதிரியக்க சிகிச்சையும் தரப்படுவதுண்டு.

நோய் மூன்றாம் கட்டத்தில் இருக்கிறது என்றால், மருந்து சிகிச்சையையும் கதிரியக்க சிகிச்சையையும் கொடுத்து, கட்டியைச் சுருங்கவைத்த பின்னர் அறுவை சிகிச்சை செய்கிறார்கள். அப்போதும் அறுவை சிகிச்சைக்கு நோயாளியின் உடல் தயாரில்லை என்றால் மருந்து சிகிச்சையையும் கதிர்வீச்சு சிகிச்சையையும் மட்டுமே வழங்குகிறார்கள்.

நோய் நான்காவது கட்டத்தை எட்டிவிட்டது என்றாலும், அறுவயச் சிகிச்சையைத் தவிர்த்துவிட்டு, மருந்து சிகிச்சை மற்றும் கதிர்வீச்சு சிகிச்சை மேற்கொள்ளப்படுவது உண்டு. நோயின் இறுதிக்கட்டத்தில், இனி எந்த ஒரு மருத்துவமும் பயன் தராது என்னும் நிலைமையில், 'பேலியேட்டிவ் கேர்' (Palliative care) எனும் பாதுகாப்பு



சிகிச்சையில் நோயாளி இருக்க வேண்டும். இதில் நோயாளியைச் சிரமப்படுத்தும் வலி, வாந்தி, உணவு சாப்பிட முடியாதது போன்ற பிரச்சினைகளுக்கு முடிவுகட்ட சிகிச்சை தரப்படும்.

புற்றுநோய்க்கான மருந்து சிகிச்சையில் தற்போது 'இமுனோதெரபி' சிகிச்சையும் 'இலக்குசார் சிகிச்சை'யும் (Targeted treatment) கதிர்வீச்சு சிகிச்சையில் சைபர் நைஃப், 'ட்ரூ பீம்' சிகிச்சைகளும் முக்கிய இடம் பிடித்துள்ளன. இவை பழைய சிகிச்சைமுறைகளில் ஏற்படுகின்ற வாய்ப்புண், அல்சர், குமட்டல், வாந்தி, சாப்பிட முடியாத நிலைமை, முடிகொட்டுதல் போன்ற பல பக்க விளைவுகளைக் குறைப்பதோடு, சிகிச்சைக்கான காலத்தையும் குறைத்துவிடுகின்றன.

அடுத்ததாக, புற்றுநோய் சிகிச்சையில் தொடர்

# மோசடிக்கு முடிவு கட்டுவது எப்படி?

ஹரி

ஓய்வுபெற்ற மருத்துவர் ஒருவர், பணி ஓய்விற்குப் பிறகு தனது மாத வருமானத்திற்காக 2014ஆம் ஆண்டு, ஓய்வூதியக் காப்பீடு ஒன்றை எடுத்துள்ளார். வருடத்திற்கு ரூ.1 லட்சம் பிரீமியம் தொகை செலுத்தினால் மூன்று வருடங்களுக்குப் பிறகு மாதவுக்கு ரூ.6,000 மாத வருமானமாக 2032 வரை கிடைக்கும். இதற்கிடையில் ஆண்டு போனஸ் தொகையும் உண்டு. இதுதான் இக்காப்பீட்டின் முழு விவரம். 2016ஆம் ஆண்டிலிருந்து இத்தொகை பிரதி மாதம் இவருக்குச் சரியாக கிடைத்துதான் வந்திருகிறது. ஆனால், கடந்த வாரம், தனது வாழ்நாள் சேமிப்புப் பணம் ரூ.90 லட்சத்தை மோசடியாளர்களிடத்தில் பறிகொடுத்துத் தவிக்கிறார்.

மற்றொரு சம்பவத்தில் 40 வயதாகும் நபர், தனது மகளுக்காக எடுத்து வைத்திருந்த காப்பீட்டுத் தொகைக்கான போனஸ் பெறும் நேரத்தில், மோசடியாளர்களிடத்தில் ரூ.13 லட்சம் பணத்தை இழந்திருக்கிறார்.



இன்னுமொரு சம்பவத்தில் 70 வயதாகும் ஓய்வூதியர் ஒருவர் அவரது இறுதி சேமிப்பான ரூ.10 லட்சத்தை மோசடியாளர்களிடத்தில் இழந்துவிட்டார். இது எல்லாமே கடந்த ஒரு மாதத்தில் நிகழ்ந்த மோசடிகள்.

### என்ன நடந்தது?

காப்பீடு பெற்றவர்கள் எப்படி தங்கள் சேமிப்பை இழக்கிறார்கள்? இவர்களில் முதல் நபருக்கு சில நாட்களுக்கு முன்பு ஓர் அழைப்பு வந்திருக்கிறது. காப்பீட்டு நிறுவனத்தில் இருந்து பேசுகிறோம் என்றும் 2032ஆம் ஆண்டு வரை அவருக்கு வர வேண்டிய மாதத் தொகை ரூ.6,000 மற்றும் போனஸ் தொகை ரூ.10 லட்சம் இது அனைத்தையும் சேர்த்து ரூ.30 லட்சமாக இப்போதே பெற்றுக்கொள்ளலாம் என அவர்கள் தெரிவிக்க, மகிழ்ச்சியில் உறைந்துபோகிறார். ஏன், எதற்காக என மாதவ் விசாரிக்க, இது முதியோர்களுக்கென அறிமுகம் செய்யப்பட்ட வசதி என்று மோசடியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

"சரி! இதற்காக நான் என்ன செய்யவேண்டும்?" என மாதவ் கேட்க, இதற்காகவே காத்திருந்தவர்கள் மோசடியைக் கட்டவிழ்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். இப்போது இருக்கும் ஓய்வூதியக் காப்பீட்டை முன்கூட்டியே முடிக்க (Pre Closure) வேண்டும். அதற்கான கட்டணமாக வரப்போகும் ரூ.30 லட்சத்தின் பத்து சதவீதமான மூன்று லட்சத்தை இப்போது செலுத்தவேண்டும் என அவர்கள் தெரிவிக்க, அதான் ரூ.30 லட்சம் வரப்போகிறதே என்ற நம்பிக்கையில் அவர்கள் கேட்ட பணம் ரூ.3 லட்சத்தை அவர்களது வங்கிக் கணக்கிற்கு அனுப்பியிருக்கிறார்.

கவனிப்பு என்பது மிகவும் முக்கியம். மருத்துவரின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட இடைவெளிகளில் மருத்துவப் பரிசோதனைகளும் உடல் பரிசோதனைகளும் செய்துகொண்டால்தான் நோயைக் கட்டுப்படுத்துவதும் குணப்படுத்துவதும் மறுபடியும் அது வருவதைத் தடுப்பதும் கைகூடும்.

### தடுப்பது எப்படி?

புகைப்பழக்கத்தை எல்லா வழிகளிலும் விட்டொழிப்பது ஒன்றுதான் நுரையீரல் புற்றுநோய் வராமல் தடுக்கும் முக்கிய வழி. இறைச்சி அதிகமில்லாமல், காய்கறி மிகுந்த உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். தொழில் சார்ந்த நுரையீரல் புற்றுநோய் வர வாய்ப்பு உள்ளவர்கள் அந்தந்தத் தொழிலுக்கு ஏற்ற தடுப்புக் கவசங்களை அணிந்துகொண்டு பணிபுரிவது நல்லது.

### நுரையீரல் புற்றுநோய் ஸ்கிரீனிங்!

வம்சாவளியில் புற்றுநோய் வந்திருப்பவர்களும், புகைப்பழக்கம் உள்ளவர்களும், நுரையீரல் புற்றுநோய் வர வாய்ப்புள்ள வேலைகளில் உள்ளவர்களும் ஆண்டுக்கு ஒருமுறை 'குறை அளவு சி.டி. ஸ்கேன்' (Low dose CT scan) பரிசோதனை செய்துகொண்டால், அறிகுறிகள் தெரியாத தொடக்க கட்டத்திலேயே நோயைக் கண்டுபிடித்துவிட முடியும். அவ்வாறு கண்டுபிடிக்கப்படும் நோயாளிகளுக்கு நுரையீரல் புற்றுநோய் முழுவதுமாக குணமாவதற்கு 80% வாய்ப்புள்ளது என்பது ஆறுதல் தரும் செய்தி.

அதன் பிறகு மீண்டும் ரூ.3 லட்சம், ரூ.5 லட்சம் என்று தான் விட்ட தொகை யைப் பெறுவதற்காக இதுவரை அவர்களிடம் ரூ.90 லட்சம் பணத்தை இழந்திருக் கிறார். அதற்கு மேலும் தருவதற்குப் பணம் இல்லாமல் ரூ. 2 லட்சம் கடனாக தனது காவல் துறை நண்பரிடம் கேட்க, தான் ஏமாற்றப் பட்டதை அவர் சொன்ன பிறகே உணர்ந்திருக்கிறார்.

இரண்டாவது சம்பவத்தில், அவரது மகளுக்காக அவர் எடுத்த காப்பீட்டின் போனஸ் நான்கு மடங்காக உயர்ந்திருப்பதாக மோசடியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எப்படி என மகேஷ் விசாரிக்க, அவரது காப்பீட்டு பிரீமியம் தொகையைப் பங்குச் சந்தைகளில் முதலீடு செய்ததால் இந்த லாபம் எனவும், டிவிடெண்ட் எனப்படும் இந்த லாபப் பங்கை அவர் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்க, தான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டிருக்கிறார்.

## தெரியாத விடயங்களுக்குப் பணம் அனுப்பும்போது, மிக நிச்சயமாக ஒரு நண்பரிடமாவது கேட்டு, அதுகுறித்த ஒரு தெளிவுபெற்ற பிறகு பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுங்கள்

டிவிடெண்ட் தொகையைப் பெறுவதற்கான ஜிஎஸ்டி வரியை முன்கூட்டியே அரசுக்குச் செலுத்தவேண்டும் என ரூ.3 லட்சம் பணம் கேட்க, அவரும் பணத்தை அவர்களது கணக்கிற்கு அனுப்பி வைத்திருக்கிறார். வரியை உயர்த்திவிட்டார்கள், பங்குச்சந்தைக் கட்டணம் எனத் தொடர்ந்து ரூ.13 லட்சம் வரை மோசடி செய்திருக்கிறார்கள்.

மூன்றாவது சம்பவத்தில் அவர் உயிராக நினைக்கும் மருத்துவக் காப்பீடு இன்று முதல் வேலை செய்யாது. அதை மீண்டும் 20 வருடங்களுக்கு நீட்டிக்க உடனடியாக ரூ.10 லட்சம் செலுத்துங்கள் என மிரட்ட பதறிப்போன சிங், தனது இறுதி சேமிப்புப் பணத்தை மொத்தமாக அவர்களிடத்தில் இழந்திருக்கிறார்.




சரி, ஏமாற்றப்பட்ட இவர்கள் மூவரும் எப்படி ஒரு அலைபேசி அழைப்பை நம்பி இத்தனை லட்சப் பணத்தை இழந்தார்கள், ஒரு துளிகூட சந்தேகம் வராதா? சுதாரிப்பு இல்லை என நீங்கள் நினைக்கலாம். நமக்கு இதுபோன்ற அழைப்பு வந்திருந்தால், நாமும் நம்பியிருப்போம் என்பதுதான் உண்மை.

காரணம், அழைத்த மோசடியாளர்கள் வசம் இவர்களது பெயர், பாலிசி எண், காப்பீடு திட்ட விவரம், கடைசியாகச் செலுத்திய பிரீமியம் தொகை, போனஸ் நிறைவு திகதி ஆகிய முக்கிய விவரங்கள் இருந்திருக்கின்றன. இதைச் சொல்லியே காப்பீடு நிறுவனத்தில் இருந்து நாங்கள் அழைக்கிறோம் என நம்ப வைத்திருக்கிறார்கள். மோசடியாளர்கள் கைகளுக்கு இந்த முக்கிய விவரங்கள் எப்படிப் போனது? காப்பீடு நிறுவனத்தில் பணிபுரியும் யாரேனும் இத்தகவல் கசிவை ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்ற கோணத்திலும் காவல் துறை விசாரணை நடந்துவருகிறது.

*** *** ***

நாம் இதிலிருந்து அறிந்துகொள்ள சில விடயங்கள் இருக்கின்றன:

நாம் எல்லோர் குறித்த பெரும்பாலான முக்கிய தகவல்கள் பொதுவெளியில் கசிந்து கிடக்கின்றன. ஒரு சில பல முயற்சிகளில் அதை எடுத்து மிக அழகாகத் தொகுத்துவிட முடியும். ஆகவே, உங்க பிறந்த திகதி, ராசி, நட்சத்திரம், நீங்கள் படித்த பாடசாலை எல்லாம் சரியாகச் சொன்னாலும் அலைபேசி அழைப்புகளை நம்ப வேண்டாம்.

டெலிமார்க்கெடிங் அழைப்புகளைத் தவிர, எந்த வங்கிப் பணியாளரும் வாடிக்கையாளரை அலைபேசியில் தொடர்பு கொள்ளமாட்டார்கள். அப்படியே அழைத்தாலும் பணம் அனுப்பச் சொல்லி கேட்கவே மாட்டார்கள். சிக்கலில் இருக்கிறேன் என்று பணம் கேட்டு நண்பரிடம் இருந்து வரும் உள்பெட்டி செய்தி அனைத்துமே மோசடிதான். பணம் வேண்டும் என்றால் நண்பர்கள் அலைபேசியில் அழைப்பார்களே தவிர வெறும் செய்தி அனுப்ப மாட்டார்கள். ஒரே வரியில் சொன்னால் அலைபேசியில் வரும் எதையும் நம்பாதீர்கள். நீங்கள் வீட்டுக்கு வாருங்கள் பேசுவோம், அல்லது உங்கள் அலுவலகத்திற்கு நானே நேரில் வருகிறேன் எனச் சொல்லுங்கள், எதிர்முனையில் பதிலே இருக்காது.

ஒருவரிடமிருந்து பணத்தை உடனடியாக மோசடி செய்ய வேண்டுமெனில் அவரை யோசிக்க விடாமல் செய்யவேண்டும், இதற்கு இரண்டு உத்திகள் போதுமானது. முதலாவது அவருக்கு பயம், பதற்றத்தை ஏற்படுத்தவேண்டும். உங்கள் வங்கிக் கணக்கு இன்றுடன் முடக்கப்படுகிறது, நீங்கள் வருமான வரி ஏமாற்றியதால் கைது நடவடிக்கை தொடங்குகிறோம், உங்கள் நண்பர் விபத்தில் சிக்கிவிட்டார், உங்கள் புகைப்படம் வெளியில் வந்தால் மொத்த சமூகமும் சிரிக்கும், உங்கள் குழந்தை

யைக் கடத்திவிடுவோம் என இதெல் லாம் முதல் உத்தி. சீன கடன் செய லிகளின் கலெக்சன் பணியாளர்கள் இதைவிட மிரட்டுவார்கள், ஆனாலும் அசரப்படக்கூடாது. கடந்து சென்று விடவேண்டும். வரம்பு மீறினால் நிச்சயம் காவல் துறையில் முறைப்பாடு அளிக்கவேண்டும்.

இரண்டாவது உத்தி, ஆசையைத் தூண்டுவது. "உங்கள் போனஸ் இன்று வருகிறது. இதைவிட்டால் இனி காப்புறுதி முதிர்வில்தான் எடுக்க முடியும்" "உங்கள் பேலன்ஸ் டபுள் ஆகிவிட்டது" என அழைப்புகள் வந்தாலே உஷாராகிவிடவேண்டும். இந்த சிறிய தொகையை மட்டும் செலுத்தினால் போதும், இத்தனை லட்சம் உங்களுக்குச் சொந்தம் என வரும் அத்தனை அழைப்புகளும் மோசடிதான். நம்மை பணக்காரனா கவோ, அதிர்ஷ்டக்காரனாகவோ ஆக்குவதற்காக எந்த நிறுவனமும் தொடங்கப்படுவதில்லை என்ற உண் மையை நீங்கள் உணர்ந்து கொண் டாலேபோதும். உழைக்கும் நிலையில் உடல்நிலை இருந்துவிட்டால் அதை விடப் பெரிய அதிர்ஷ்டம் எதுவு மில்லை நண்பர்களே.

ஒருவேளை நீங்கள் மோசடியில் சிக்கிக்கொண்டீர்கள். முதல் முறை பணத்தை இழந்துவிட்டீர்கள் என்றால், நீங்கள் செய்யவேண்டியது, எத்தனை விளக்கம் கொடுத்தாலும் இழந்ததை மீட்கிறேன் என மீண்டும் மீண்டும் மோசடியாளர்களுக்குப் பணம் அனுப் பிக்கொண்டே இருப்பதை நிறுத்துங் கள். இதுவே, நவீன மோசடிகளில் மாறாமல் இருக்கும் ஒரு உத்தி. "சிறிய தொகை, இதைத் தந்தால் போதும், முந்தைய தொகையும் சேர்த்து கிடைத்துவிடும்" எனத் தொடர்ந்து பணம் கேட்டு பெருந்தொகையை மோசடி செய்வது. ஒருமுறை பணம் இழந்துவிட்டால், முறைப்பாடு செய்து விட்டு போனது போனதுதான் என காவல் துறை நடவடிக்கைக்காக காத் திருங்கள். அவர்கள் மீண்டும் அழைத் துப் பணம் கேட்டு மிரட்டுவார்கள், கெஞ்சுவார்கள், கோபமூட்டுவார்கள், அவர்களது எண்ணைத் தடைசெய்து விட்டுக் கடந்துவிடுங்கள். முதல்முறை இழந்த மன வலி இருக்கத்தான் செய் யும். ஆனால், இரண்டாவது முறை, மூன்றாவது என அனுப்ப அனுப்ப மொத்த கையிருப்பும் கரைந்து வாழ்வு விரக்தியாகிவிடும்.

தெரியாத விடயங்களுக்குப் பணம் அனுப்பும்போது, மிக நிச்சயமாக ஒரு நண்பரிடமாவது கேட்டு, அதுகுறித்த ஒரு தெளிவுபெற்ற பிறகு பரிவர்த் தனைகளை மேற்கொள்ளுங்கள். இக்கட்டுரைகளில் நாம் குறிப்பிட்டிருக் கும் நிகழ்வுகளை, தவிர்க்க வேண்டிய வற்றை உங்கள் குடும்பத்தார் மற்றும் நண்பர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நமது வாழ்வில் கற்றலுக்கு என்றுமே முடிவு இல்லை. ஒவ்வொரு நாளும் நமக்கு நேரும் நிகழ்வுகள் எதையாவது கற்பித்துக்கொண்டே இருக்கிறது. இதுபோன்ற மோசடிகள் நிகழ்ந்த விதம் குறித்துத் தொடர்ந்து வாசிப்ப தும், விவாதிப்பதும், பிறருக்குத் தெரி யப்படுத்துவதும் ஒருவிதக் கற்றலே. இதுவே நமது சமூகத்தை மோசடிக ளுக்கு எதிராக விழிப்படையச் செய் யும். இணையம் குறித்த நம் அடிப் படை விழிப்புணர்வு மட்டுமே நவீன மோசடிகளை முறியடிக்கும் ஒரே ஆயுதம். அதை வாசிப்பால் கூர்தீட் டுங்கள் நண்பர்களே!

# பிறர் அறிவையும் பயன்படுத்துவோம்!



**பவித்ரா நந்தகுமார்**

ஒரு அறிவியலாளர் 1,093 கண்டுபிடிப்புகளைச் செய்து அவை அனைத்திற்கும் காப்பு ரிமை பெற்றிருக்கிறார் என்ற செய்தியை வாசித் தறிந்தபோது ஆச்சரியமாக இருந்தது. அவர்தான் தோமஸ் அல்வா எடிசன். அவரது கண்டுபிடிப் புகள் எவையும் சாதாரணமானவை அல்ல. மின் சார பல்பு முதல் திரைப்படம் வரை மிகப் பெரிய கண்டு பிடிப்புகளும் அடங்கும்.

அவர் எப்படி அதைச் சாதித்தார் தெரியுமா? தன்னு டைய அறிவு, அனுபவம் மட்டுமல்லாமல் அடுத்தவர் அறிவுடன் கூடிய அனுபவத்தையும் முழுமையாகப் பயன்படுத்தினார். ஒரு பொருள் பற்றிய ஆய்வில் ஈடு படுவதற்கு முன் அப்பொருள் பற்றி அதுவரை வெளி யான எல்லா நூல்களையும் படித்து விடுவார்.

அதுமட்டுமல்லாமல் பிறர் கண்டுபிடித்து நின்றுவிட்ட இடத்திலிருந்து தன் ஆராய்ச்சியைத் தொடங்குவார். இதனால் அவர்கள் செய்திருந்த தவறுகளைச் செய்யாமல் தன்னைக் காத்துக் கொள்ள முடிந்தது. அவர்களது பல வருட அனுபவங்களின் பயனை அவர் எடுத்துக் கொண்டதால்தான் இத்தனை மகத்தான சாதனைகளைத் தன் வாழ்நாளில் அவரால் நிகழ்த்த முடிந்தது.

பிறரின் அனுபவங்களைப் பயன்படுத்துவது அறிவி யல் ஆய்வுக்கு மட்டுமல்ல, அனைத்துக்கும் பொருந்தும். ஒரு கதை நினைவுக்கு வருகிறது. குறிப்பிட்ட ஓர் இடத் தில் புதையல் இருப்பதாக யாருடைய வாய் மொழியையோ

கேட்ட ஒரு மனிதன் பல நாள் பாடுபட்டு அந்த இடத்தில் நிலத்தைத் தோண்டினான்.

ஒரு மாத காலம் போராடி 40 அடி ஆழம் தோண்டினான். பின் அவன் மனம் சோர்ந்தான். நிச்சயமில்லாத ஒரு விஷயத்தில் ஏன் நாம் சிரமப்பட வேண்டும் என்று எண்ணி, தோண்டுவதை அன்றோடு நிறுத்தி விட்டுச் சென்றுவிட்டான்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த வழியே சென்ற மற்றொருவனின் கண்களில் இந்த நிலம் தட்டுப்பட, அவன் முதலாமவன் விட்டுச் சென்ற இடத்திலிருந்து நிலத்தை இன்னும் ஆழமாக தோண்டத் தொடங்கினான். 50 அடி ஆழத்திலேயே அவனுக்குப் புதையல் கிடைத்தது. நம்பிக்கையோ, அதிர்ஷ்டமோ இக்கதையின் பேசுபொருள் அல்ல. பிறரது பணியின் பங்களிப்பு நம் பணியுடன் இணையும்போது ஏற்படும் முன்னேற்றமுமே இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

ஒரு தந்தையானவர் தான் அனுபவத்தில் கண்ட வியாபார நுணுக்கத்தை தனக்குப் பின் வியாபார பொறுப்பை ஏற்க வரும் தன் மகனுக்கு சொல்லிக் கொடுப்பார் இல்லையா அதுபோலத் தான். தாம் கற்ற, கேட்ட, அறிந்த, தெளிந்த, கணித்த கூறுகளை மனிதன் புத்தகங்களாக எழுதிக் குவித்து வைத்துள்ளான். புத்தகங்களிலிருந்து பெறும் அனுபவங்களை நம் வாழ்வில் பயன்படுத்துவதுகூட இந்த வகைதான்.

பிறருடைய பணத்தை எப்படி நான் ஏற்பதில்லையோ அதேபோல பிறருடைய அறிவையும் நான் பயன்படுத்துவதில்லை என்று இருப்போரும் உண்டு. வீடு கட்ட நல்ல திட்டமொன்றை சொன்ன உறவினரின் கூற்றை வேண்டுமென்றே நிராகரித்தார் நண்பர் ஒருவர்.

பிறரின் அறிவுரையும் ஆலோசனையும் எனக்குத் தேவையில்லை, அனைத்தையும் நானே பார்த்துக் கொள்வேன் என்ற மனநிலைதான் இதற்குக் காரணம். உறவினரின் வழிகாட்டலைப் புறக்கணித்ததால் கால விரயமும் பண விரயமும் ஏற்பட்டதை உணர்ந்து நொந்தார் நண்பர்.

இப்படி வலிய வந்து அறிவுரை சொல்பவர் உயர்ந்தவர் இல்லை. அவர்கள் சொல்லும் திட்டங்களை நாம் செயல்படுத்துவதால் நாம் கீழ் நிலையில் இருப்பதாக அர்த்தமும் இல்லை. பரஸ்பரம் ஒரு கருத்து பரிமாற்றம், அவ்வளவே! அதில் பெரும் மனத் திருப்தியும் கிடைக்கிறது.

நம்முடைய வேலையைச் செய்ய ஊழியர்கள் பலரை நியமித்து பணிகளை பிரித்துத் தருகிறோம். இது எப்படி இயல்பானதோ அப்படி இயல்பானதுதான் பிறர் அறிவையும் அனுபவத்தையும் நாம் பெறுவதும்.

"மெய், வாய், கண், மூக்கு, செவி என்று புலன்களின் வழியாக அறிந்த வகையில் அறிவு ஐந்து; புலன்களால் உற்று அறிந்தவற்றையெல்லாம் மனத்தினுள் வாங்கிக் கொண்ட வகையில் அறிவு ஆறு; வாங்கிக் கொண்டவற்றையெல்லாம் வகைப்படுத்தித் தொகுத்து, உணர்ந்துகொண்ட வகையில் அறிவு ஏழு. கல்வியுடன் சேர்ந்து பெற்ற அறிவு எட்டு. கல்வி அனுபவத்துடன் ஒன்பது. இறையருளைப் பற்றும் அறிவு பத்து' என பத்து வகையான அறிவுகளைப் பற்றி பேசுகிறது திருமூலரின் 'திருமந்திரம்'.

ஆனால் இன்றைய நவீன காலத்தில் இவற்றையெல்லாம் தாண்டி நாம் பலவற்றை பலரிடமிருந்து பெற்று நம் அறிவுத்திறனை மேம்படுத்திக் கொள்ள முனைய வேண்டியதாய் உள்ளது.

ஆசிரியர் ஒருவர், தன் மாணவனுக்கு தனக்கு தெரிந்த அத்தனை விஷயங்களையும் அவனது தேவைக்கேற்ப வழங்குகிறார். தன்னுடைய ஐம்பதாவது வயதில் தான் கற்றதைக்கூட 15 வயது மாணவனுக்கு விளக்குகிறார். ஆசிரியர்களைத் தவிர வேறு யாருக்கும் நம்மிடம் நின்று பேசவோ அறிவுரை சொல்லவோ இன்று நேரம் கிடையாது. பந்தயக் குதிரைகளின் மீதேறி ஓடுவதுபோல் அவரவர் ஒவ்வொரு திசையில் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

ஆசிரியருக்கு அடுத்து மாணவனுக்கு தனிப்பட்ட முறையில் அறிவு தானம் வழங்கி அவனை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்ல யாரும் இருப்பதில்லை. அப்படி இருந்தாலும் அவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அப்படி இருப்பவர்களும் நமக்கு பொருந்தும்படியாக நம் அலைவரிசைக்கு ஒத்துப்போகும் வண்ணம் இருப்பார்களா என்பது கேள்விக்குறிதான்.

**இந்த உலகமே இப்படித்தான். தான் அரும்பாடுபட்டு பெற்றதை பிறர் சுலபமாக பெறுவதை பலர் விரும்புவதில்லை.**

ஒரு சமயம் ஒரு கருத்தரங்கிற்குச் சென்றிருந்தேன். அங்கு வந்திருந்த பெரியவர்கள் உயரிய கருத்துக்களை எடுத்துரைத்த வண்ணம் இருந்தனர்.

கூட்டத்தில் அமர்ந்திருந்த ஒருவர் எழுந்து, இத்தகைய சிறந்த கருத்துகளை தாங்கள் எப்படி பெற்றீர்கள்? அதை நாங்களும் பெற எங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று வேண்டினார்.

அதற்கு அந்தப் பெரியவர், "நான் பல வருடங்கள் செலவழித்து இதைக் கற்றேன். நீங்களும் உங்கள் சொந்த முயற்சியில் தேடித் தேடி கற்று முன்னேறுங்கள்" என்று கூறிச் சென்றார். இந்த உலகமே இப்படித்தான். தான் அரும்பாடுபட்டு பெற்றதை பிறர் சுலபமாக பெறுவதை பலர் விரும்புவதில்லை. இதனால்தான் நாம் மனிதர்களை காட்டிலும் தொழில்நுட்பத்தை அதிகம் கைக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அது இந்த நவீன காலத்தில் ஏற்புடையதாகவும் இருக்கிறது.

முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுள் ஒன்று சில தினங்களுக்கு முன் தன் புதிய தயாரிப்பை சந்தையில் அறிமுகப்படுத்தியது. அறிமுகமான சில மணி நேரத்திற்குள்ளாகவே அதை விலை கொடுத்து வாங்க ஒரு கூட்டமே அலைமோதுகிறது. ஏனென்றால் இதே உளவியல்தான். மனிதர்களிடையே, நட்பு வட்டத்தினரிடையே,




ராஜேஸ்வரி

# கடன் வேண்டாமே!

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இடம், கல்வி, ஆரோக்கியம் ஆகியனவற்றைப் பெற்றிருந்தாலே நாம் மகிழ்ச்சியாக வாழ முடியும். வாழ்க்கையில் தேவையில்லாததைக் கைவிடுவதும், தேவையில் மட்டும் கவனம் செலுத்துவதும் மிகவும் முக்கியம். அன்றாட வாழ்வில் அடிப்படை தேவைகளில் எளிமையைக் கடைப்பிடித்தால், பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதார சிக்கல்களை நம்மால் தவிர்க்க முடியும்.

திருமணமானதும் ஒரு முழுமையான புதிய வாழ்க்கை முறைக்கு குடும்பத் தலைவர்கள் தங்களைப் பொருத்திக்கொள்ள வேண்டும். தனக்கு முந்தைய தலைமுறை, தனது தலைமுறை, தனக்கு அடுத்த தலைமுறை என மூன்று தலைமுறைகளைப் பராமரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள் இவர்கள். எனவே, வாழ்க்கைத் துணையுடன் ஆலோசித்து நிதி நிர்வாகம் பற்றிய தெளிவான சிந்தனையுடன் வாழ்க்கையைத் தொடங்குவது நல்லது.

இருவரும் ஒவ்வொரு மாதமும் ஏற்படும் வரவு,செலவு, சேமிப்பு, கடன் இவற்றைப் பற்றிய விவரங்களில் வெளிப்படைத் தன்மையுடன் இருக்கவேண்டும். கடனின்றி வாழ வேண்டுமானால், எப்போது, யார், எவ்வளவு செலவழிக்கவேண்டும் என்பதில் சரியான முடிவு எடுக்கவேண்டும். வங்கி ஒன்றில் ஒரு கூட்டுக் கணக்கை மின்னஞ்சல் முகவரியுடன் தொடங்குவது நல்லது. அந்த வங்கிக் கணக்குகள் தொடர்பான கட்டண அறிக்கைகள், இதர செலவுகளைப் பற்றி இருவரும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

நிதி சார்ந்த விடயத்தில் வருமானத்திற்குள் வாழக் கற்றுக் கொள்வது மிக முக்கியமானது. மேலும், எதிர்பாராத சூழ் நிலைகளை சமாளிக்க நிதி நிலைமை தயாராக இருக்கும் நிலையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இது இருவருக்கும் எளிதில் பணமாக்கக்கூடிய ஒரு நிதித் திட்டமாக இருக்க வேண்டும்.

கடன் இருந்தால் சேமிப்பில் உள்ள பணத்தைக் கொண்டு, அதிலிருந்து விரைவாக வெளியே வர முயற்சிகள் எடுக்கவேண்டும். தேவைப்படும் பொருட்களை மாதக் கடனில் வாங்குவதைத் தவிர்த்து, கடனில்லாமல் கையிலிருக்கும் காசைக் கொண்டு வாங்கலாம். ஆடம்பர வாழ்வை தவிர்த்து, குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வாடகை வீடு,

உறவுகளிடையே பிறர் அறிவை பயன்படுத்த இங்கு ஒரு இடைவெளி விழுந்துவிட்டதால் மனிதன் தொழில்நுட்பத்தை அதிக அளவு பயன்படுத்தத் தொடங்கிவிட்டான்.

தனக்கென்று நம்பகமானவர்களை வைத்துக் கொள்ள அவனுக்கு தொழில்நுட்பம் சுலபமாகக் கைகொடுக்கிறது. கேட்டதை வழங்கும் காமதேனுவைப் போல அவன் தேடுவனவற்றையும் அவனுக்கு தேவைப்படும் அனைத்தையும் தன் தகவல் சுரங்கத்திலிருந்து வாரி வழங்குகிறது. எட்டாம் அறிவான தகவல் தொழில்நுட்பத்தின் அறிவையும் மனிதன் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதால் அவன் பல விஷயங்களில் தன்னம்பிக்கை உடையனவாக இருக்கிறான்.

ஒரு தாய், தன் குழந்தைக்கு உடல் நலமாக இருக்கும்போது திட உணவையும் காய்ச்சலாக இருக்கும்போது கஞ்சியையும் கொடுப்பாள். அவளுக்குத் தெரியும் தன் குழந்தைக்கு எந்தெந்த காலத்தில் என்னென்ன தரவேண்டும் என்பது. பிள்ளைகளுக்கு எப்படி தாய் பார்த்து பார்த்து சமைத்து கொடுப்பாளோ அதேபோன்ற பங்களிப்பை செய்ய வந்துவிட்டது "ஆர்ட்டிஃபிஷியல் இன்டலிஜென்ஸ்' எனும் செயற்கை நுண்ணறிவு.

இணையம் 3.0 வின் சாராம்சமே அதுதான். இந்த செயல்திறன் அறிவாற்றல், நமக்கு என்ன தேவையோ அதனைப் பார்த்து பார்த்து அறிந்து சேவையாற்றும். நம்முடைய உதவியாளர் நம்மிடம் கடமைக்காக வேலை செய்யாமல் தாயன்புடன் நமக்கு சேவையாற்றுவதுபோல. இப்படி அறிவுசார்ந்த விஷயத்தில் தகவல் தொழில்நுட்பம் உடன் வருவதால் ஒவ்வொரு தனிநபரின் அறிவார்ந்த பலமும் கூடுகிறது.

இந்த நவீன யுகத்தில் தொழில்நுட்பம் வழி பெறப்படும் அறிவு மிளிர்ந்து அது எவ்வித பாகுபாடும் இன்றி அனைவருக்கும் பயன்படும் விதமாக முன்னேற்றம் அடைந்துள்ளது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

எனும் திருவள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப தொழில்நுட்பத்தின் வழி பெற்றாலும் அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து தெளிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மனித சக்தி எல்லையில்லாதது. அது தொழில்நுட்ப அறிவுடன் இணையும்போது அந்த எல்லையின் பரப்பு இன்னும் இன்னும் விரிவடைந்து கொண்டே போகிறது. ஒரு அறிவியலாளரின் மூளையில் பொதிந்திருக்கும் பொக்கிஷமான தரவுகள் அனைத்தையும் சிந்தாமல் சிதறாமல் அவருக்குப்பின் அடுத்தவர் மூளைக்குள் மடைமாற்றும் ஆய்வுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்ற பாரதியின் கூற்றும் இக்கருத்துக்குப் பொருந்துவதாய் இருக்கிறது. ஆக, பிறரது அறிவையும் ஆலோசனைகளையும் பயன்படுத்தி முன்னேறுவது வெகு இயல்புதான், அது அனைத்துத் துறைகளிலும் உள்ளதுதான் என்பதை மனத்தில் இருத்தி முன்னேறுவோம்.

வாகனம், பிற பொருட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

குறைந்த நபர்கள் கொண்ட குடும்பத்துக்கு பெரிய வீட்டை வாடகைக்குத் தேர்ந்தெடுப்பது, பயன்பாடு குறைவாக இருந்தும் தேவையில்லாமல் தவணை முறையில் வாகனங்களை வாங்குவது, கடன் அட்டைகளை அடிக்கடி பயன்படுத்துவது போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது.

பல குடும்பங்களில் மனைவிக்கு அன்றாடச் செலவுகளைத் தவிர்த்து இதர பண விஷயங்களைப் பற்றி விழிப்புணர்வில்லாமல் இருப்பது துரதிருஷ்டவசமானது. ஏதேனும் நெருக்கடி நிலை ஏற்படும்போது மனைவி இப்படி இருப்பது பெரும் சிக்கல்களுக்கு வழிவகுக்கும். மேலும் அந்த பெண் குடும்ப நிதி, நிலுவையிலுள்ள கடன், காப்பீட்டுத் தொகை போன்ற எதைப் பற்றியும் அறியாமல் இருப்பார். இதனால், குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உருவாகி பெரிய பிரச்னைகளுக்கு வழிவகுக்கலாம்.

திருமணத்திற்குப் பிறகு காப்புறுதியை அதிகரிக்கவும், குடும்ப ஆரோக்கிய காப்பீட்டுத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும் முனைப்புகள் காட்டலாம். இருவரின் பெற்றோருக்கும் மருத்துவக் காப்பீடு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு வயது அதிகரிப்பதைப் போலவே மருத்துவ செலவுகளும் அதிகரிக்கும் என்பதை நினைவில் கொண்டு, அதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ள வேண்டும்.

மூத்த குடிமக்களுக்கான பல்வேறு ஆரோக்கிய காப்பீட்டுத் திட்டங்கள் இருக்கின்றன. குழந்தைகளைஅரசுப் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தல், அரசு பேருந்துகளில் பயணம் செய்தல், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக்கொள்ளுதல், எல்லா பணப்பரிவர்த்தனைகளையும் இணையவழியில் செய்தல், வீட்டிற்கு ஒரு தரைவழி தொலைபேசி பயன்பாடு போன்றவை செலவுகளைக் குறைக்கும்.

குடும்பச் செலவைக் கண்காணிப்பது அவர்களை கடனற்றவர்களாக மாற்றும். ஒரு மாதத்தில், செய்த அனைத்து செலவுகளையும் சரிபார்த்து பதிவு செய்வதன் மூலம், வரவு,செலவு பற்றிய தெளிவான புரிதல் இருவருக்கும் இருக்கும். இது தேவையற்ற செலவுகளை குறைத்து, அவர்கள் கடன்களிலிருந்து விரைவில் விடுபட உதவும்.



**குடும்பச் செலவைக் கண்காணிப்பது அவர்களை கடனற்றவர்களாக மாற்றும். ஒரு மாதத்தில், செய்த அனைத்து செலவுகளையும் சரிபார்த்து பதிவு செய்வதன் மூலம், வரவு,செலவு பற்றிய தெளிவான புரிதல் இருவருக்கும் இருக்கும்.**

இது அவர்களின் செலவுகளைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், நல்ல தொகையைச் சேமிக்கவும் உதவும். இதன் மூலம், அவர்கள் அடைய விரும்பும் வீடு கட்டுதல் போன்ற இலக்குகளை அடையவும், வாய்ப்புள்ள முதலீட்டுத் திட்டங்களை முறையாக செயல்படுத்தவும் முயற்சிக்கலாம்.

பணத்தைக் கையாள்வதில் நாம் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். அவர்கள் கேட்பதை தேவையிருந்தால் மட்டுமே வாங்கித் தர வேண்டும். அவர்களுக்கு உண்டியல் ஒன்றை வாங்கிக் கொடுத்து சேமிக்கும் பழக்கத்தை கற்றுக் கொடுக்கலாம். சிக்கனமாக வாழவும், நமது வருமானத்தை உயர்த்தவும் வழிகளை கண்டு பிடிக்க வேண்டும்.

கடனில்லாமல் வாழ்கிறேன் என்ற நினைப்பு தரும் நிம்மதியை உணர்ந்தோர் கடன் வாங்கி பொருள் சேர்க்க ஆசைப்பட மாட்டார்கள். கடன் என்ற சொல்லைக் கேட்கவே மனம் அஞ்சி கலங்க வேண்டும். கடனிலும், தவணை முறையிலும் ஒருபோதும் பொருள்களை வாங்கக் கூடாது. தள்ளுபடி என்னும் கொடிய வலையில் சிக்க வைக்கும் இன்றைய உலகத்தில், மன உறுதி இருந்தால் மட்டுமே இது சாத்தியம்.

கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினானாம் இலங்கை வேந்தன். வேந்தனுக்கே அந்த நிலை என்றால், கடன்பட்டால் நம் நிலை என்ன? எனவே, கடனின்றி வாழ்வோம். கவலையின்றி வாழ்வோம்.

# கடா வெட்டுவது மூட நம்பிக்கையா?

**சே.செந்தில்**

மூட நம்பிக்கை எந்த வகையில் வந்தாலும் எந்த ரூபத்தில் வந்தாலும் அது ஒழிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் மூட நம்பிக்கை என்ற பெயரில் அனைத்தையும் பொது முத்திரை குத்துவதை ஏற்க முடியாது. மூட நம்பிக்கை குறித்து ஆராய்வதும், அதற்கான விளக்கத்தைக் கொடுப்பதும் இங்கு முக்கியமானதாகும். அப்படி நாட்டார் தெய்வ வழிபாட்டில் கடாவெட்டு என்ற ஒரு வழிபாட்டு முறை குறித்தும் அணுகுவது இன்றியமை யாதது.

மக்கள் தங்களது வேண்டுதல் நிறைவேற வேண்டி ஆடு, கோழி, பன்றி, எருமை மாடு போன்றவற்றை பலி கொடுப்பார்கள். அதில் ஒன்று தான் ஆட்டினை பலி கொடுக்கும் கடாவெட்டு. யாழ்ப்பாணத்தில் இன்றும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. இதற்கு எதிர்ப்பும் கடுமையாக இருக்கின்றது. நீதிமன்றங்களும் இந்த கடாவெட்டு ஒழிப்பிற்கு ஆதரவான நிலைப்பாட்டையே பெரும்பாலும் எடுக்கின்றன. கசாப்புக் கடைச் சட்டங்களின் கீழேயே இன்று கடா வெட்டு நிகழ்வுகள் கோயில்களில் நடத்தப்படுகின்றன. அதனால் கோயில்கள் கசாப்புக் கடைகளா என்கிற கேள்வியும் எழுப்பப்பட்டு, அதன் வழியேதான் கடா வெட்டு வழிபாடும் அணுகப்பட்டுத் தீர்பளிக்கப்படுகின்றன. இது சரியானதா?

இந்த கடாவெட்டு என்ற மரபு சங்க இலக்கியத்தில் இருந்து உள்ளது. சங்க இலக்கியம் தொட்டு உடன்கட்டை ஏறுதல், பெண்ணடிமைத்தனம், சாதி, தேவதாசி முறை முதலியவையோடு கடாவெட்டு என்ற நிகழ்வும் மூட நம்பிக்கை பட்டியிலில் இடம் பிடிக்கிறது. உண்மையில் இந்த கடாவெட்டு மூடநம்பிக்கையா என்பது குறித்து அறிய முற்படுவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

கடாவெட்டின் மூலம் என்பது உயிர்பலி, நரபலி என்ற பெயரில் ரிக் வேதத்தில் கூறப்பட்டுள்ளதாக 'நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளில் கடாவெட்டு' என்ற கட்டுரையில் முனைவர் சிவசங்கரி கூறியுள்ளார். இந்தக் கூற்றை வேறு ஒரு கோணத்தில் பார்க்கலாம் என்பதும் இந்தக் கட்டுரையின் நோக்கம். வேதத்திற்கும், நாட்டுப்புற வழிபாட்டிற்கும் துளியளவும் சம்பந்தம் கிடையாது. ஆனால் புராணக் கதைகளின் கிளைக்கதைளை நாட்டுப்புறவியலுடன் சேர்த்து அந்தப் புராணக் கதைகள் வேரூன்றி நிற்க மாற்றிக் கொண்டது. யாழ்ப்பாணத்தில் வைரவர், நரசிம்மர் வழிபாடுகள் நாட்டுப்புறவியலுடன் கூடியது. இந்து மதம் என்கிற எண்ணக்கரு வேரூன்றிய பின்னர் இந்த நாட்டுப்புறவியல் வழிபாட்டு முறைகளை ஒதுக்கிப் புறந்தள்ள அது தலையால் முனைகின்றது. இந்துக் கோயில்கள் பெரு நிறுவனங்களாக வளர்ச்சிபெற்று வரும் நிலையில் மக்களைத் தம்பால் ஈர்க்க இத்தகைய நாட்டுப்புறவியல் வழிபாடுகளை அழித்தொழிப்பதில் இது கண்ணும் கருத்துமாக நிற்கிறது.

சரி கடாவெட்டு நிகழ்விற்கு வருவோம். நாட்டார் வழிபாட்டின் ஆதி மூலம் என்று கூறுவது நடுகல் வழிபாடு அல்லது அந்த மண்ணையும் மக்களையும் காத்து உயிரை விட்டவர்களின் நினைவாக வழிபாடுதான். இவை நாளடைவில் வெவ்வேறு கதைகளாக மாற்றப்பட்டது.

வேத காலத்தில் உருவ வழிபாடு என்பது கேள்விக்குறி. அதனால் பிராமணர்களில் ஒரு பிரிவினர் வேதங்களைக் கடவுள்களாக வழிபட்டனர். அப்போது யாகங்களில் ஆடு, கோழி, மாடு, குதிரை போன்றவை கொல்லப்பட்டு யாக குண்டங்களில் வீசப்படும்.






# சினம்

## அயர்ச்சி தரும் முயற்சி!

பாரதூரமான சமூகக்குற்றங்கள் தொடர்பில் ஒவ்வொருவரும் கட்டாயம் சினம்கொள்ளவேண்டும் என்பதுதான் 'சினம்' திரைப்படம் சொல்லும் கதை. அதுவே குற்றங்களைத் தடுக்கும் வழி என்கிறார் இயக்குநர்.

நேர்மையான காவல்துறை அதிகாரி பாரி வெங்கட் (அருண் விஜய்). மருத்துவமனை ஒன்றில் வேலை பார்க்கும் மாதங்கி (பல்லக் லால்வானி) மீது காதல் கொண்டு, திருமணத்துக்காகத் தன் காதலியின் வீட்டு படியேறி சென்று பெண் கேட்கிறார். தந்தை பெண் தர மறுக்கவே, வீட்டின் சம்மதத்தை மீறி காதலியை கரம்பிடிக்கிறார். கண்டதும் காதல், பெண் கேட்டல் எல்லாம் 'ஜெட்' வேகத்தில் நடக்கிறது என்றால் அதன் பின்னர் திரைக் கதையில் எந்த வேகத்தையும் காணவில்லை.

அவர்களின் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக சென்று கொண்டிருக்கும் நிலையில், திடீரென ஒருநாள் எல்லாமே மாறிவிடுகிறது. அந்தத் திருப்பம்தான் கதையின் உயிர்நாடியே.

இது உயிர்ப் பலியிடுதல். அதே போல பில்லி சூனியம் போன்ற தீய செயல்கள் செய்வதற்கு நரபலி கொடுக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். இது போன்ற உயிர்ப்பலிகளை சமணர்களும் பௌத்தர்களும் எதிர்த்துள்ளனர். ஆனால் அதன் பிறகு இந்தியாவில் வந்த பக்தி இயக்க காலத்தில் இதே கொள்கைகளை கொஞ்சம் பட்டி டிங்கரிங் செய்து சைவ, வைணவ பார்ப்பனர்கள் கடவுள் சைவ வழிபாடு தான் விரும்புவார் என்று பூசை புனஸ்காரங்களுக்கு மாறினார்கள். இப்போது ஓர் அளவிற்கு உயிர்ப்பலிக்கும், நரபலிக்கும் வித்தியாசம் புரிதல் ஏற்பட்டிருக்கும்.

ஏற்கனவே நாட்டுபுற வழிபாடு என்பது மக்களுடன் மக்களாக வாழ்ந்து மறைந்தவர்களுக்குத்தான் நடத்தப்படுகிறது என்பது நாம் அறிந்தது. அப்படி இருக்க நம்முடன் வாழ்ந்தவர்களுக்கு நாம் உண்ணும் உணவைத் தான் படையலாகப் படைத்து உண்கின்றனர். வேதகாலத்தில் செய்தது போல பலியிட்டு தீயில் போடுவது இல்லை. வெட்டிய மாமிசத்தை சமைத்து அதனை முத லில் கடவுளுக்குப் படைத்துவிட்டு பிறகு ஊர் மக்கள் அனைவரும் உண்கின்றனர். இதனை மூட நம்பிக்கை என்கிறபோதுதான் நமக்குச் சந்தேகம் வருகிறது.

கிராம மக்கள் அனைவரும் வருடத்தில் ஒரு நாள் ஊர் கூடி மகிழ்ச்சியாக இருக்கத்தான் திருவிழா, கொண்டாட்டங்கள். அந்தத் திருவிழாவின் ஒரு பகுதிதான் உணவு. அந்த ஒரு நாளும் கூழும் கஞ் சியும்தான் உண்ண வேண்டுமா? நிலச்சு வான்தாரர்கள், பண்ணையாட்கள் நினைத்த நேரம், அவரவர் சௌகரியத்திற்கு அசை வம் உண்பார்கள். உழைக்கும் மக்கள் காய் கறிகளை உண்டால் அவர்களுக்கு சத்து கிடைக்குமா? அதனால்தான் கடா வெட்டு ஒரு திருவிழாவாக, ஊர்க் கொண்டாட்டமாக உருப்பெற்றது.

இப்படி வாழ்வில் ஒருமுறை அல்லது இருமுறை நல்ல நாள் அன்று தெய்வத்தின் பேரால் உண்டு மகிழ்வதை நாம் எப்படி மூட நம்பிக்கை என்று கூற முடியும். சூத்திரர்களுக்கு எதுக்கு இது போன்ற நம்பிக்கை என்று பிராமணர்கள் எண்ணுவது போல இப்போது சூத்திரர்களில் பலரும்கூட எண்ணத் தலைப்பட்டிருப்பதுதான் வேடிக்கை. அசைவத்தை சாப்பிடுவதை மூட நம்பிக்கை என்று கூறுவது எவ்வளவு அபத்தமானதோ அது போல தான் சைவ வழிபாடு என்பது அறிவியலின் வளர்ச்சி என்பது. சைவ வழிபாடும் , சைவம் சாப்பி டுவதும் அறிவியல் வளர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்?

ஒருவர் தனக்குப் பிடித்த உணவை உண்பதில் எப்படி அடுத்தவர் கருத்தை திணிக்க முடியும்? ஏழை எளிய மக்கள் தங்களுக்கு என்ன கிடைத்ததோ அதை வைத்து தான் கடவுளுக்கும் படைத்து, அதனை அவர்களும் உண்டனர். அதில் என்ன தவறிருக்கிறது அதைத் தடைசெய்ய?

ஆனால் பார்ப்பவர்களுக்கு எந்தவொரு பாதிப்பையுமே ஏற்படுத்தாமல் சாதாரணமான ஒரு சம்பவமாகக் கடந்து செல்கிறது.



பாரி வெங்கட்டின் வாழ்க்கையில் ஏற்பட்ட அந்த எதிர்பாராத பெரும் இழப்பும் அதையொட்டி அவரது தொழில் போட்டியால் கட்டமைக்கப்படும் சூழலும் அவரை முழுமையாக உடைத்துவிடுகிறது. அதனால் சினம் கொண்டு சீறும் அவர், அந்த இழப்புக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து வேட்டையாடத் துடிக்கிறார். விசாரணையில் இறங்கும் அவர், இறுதியில் குற்றவாளிகளை பிடித்தாரா, யார் அவர்கள், என்ன ஆனது படத்தின் திரைக்கதை.

அருண் விஜய்க்கு அல்வா சாப்பிடுவது போல் ஒரு கதாபாத்திரம். பொதுவாக காவல் துறை கதாபாத்திரங்களில் தன்னுடைய உடலமைப்பு, கம்பீரமான தோற்றத்தால் கச்சிதமாக பொருந்தக்கூடியவர் அருண் விஜய். இந்தப் படத்திலும் அது அவருக்குக் கைகொடுக்கிறது. நாயகி பல்லக் லால்வானி தாயாக, மனைவியாக, மகளாக குறைந்த காட்சிகளில் தோன்றினாலும் நடிப்பில் நயம் சேர்க்கிறார். காளிவெங்கட் உள்ளிட்ட கதாபாத்திரங்களின் நடிப்பு கதையோட்டத்திற்கு உதவுகின்றது.

சமூகக் கருத்துடன் கூடிய ஒரு க்ரைம் - த்ரில்லர் படத்தை கொடுக்க முயன்றிருக்கிறார் இயக்குநர் ஜி.என்.ஆர். குமாரவேலன். கதையாகப் பார்த்தால் நாம் ஏற்கெனவே பல படங்களில் பார்த்து புளித்த கதைதான். அதன் ஆக்கத்தை சுவாரஸ்யமாக திரைக்கு கொண்டுவரும் முயற்சியில் தடுமாற்றங்கள் பளிச்சிடுகின்றன. முக்கியமாக திருப்பத்திற்குரிய அந்த முக்கியமான சம்பவத்தையொட்டித்தான் திரைக்கதை வேகமெடுத்திருக்கவேண்டும். ஆனால் அதில் எந்தப் புதிய சுவாரஸியங்களையும் ஏற்படுத்த முடியாமல் முட்டுச் சந்தில் நின்று அல்லாடுகிறது திரைக் கதை.

முதல் பாதியை எடுத்துக்கொண்டால் காதல், திணிக்கப்பட்ட பாடல்கள் எனத் திக்குத் தெரியாமல் நகரும் திரைக்கதை, கதைக்குள் நுழையவே வெகுநேரம் பிடிக்கிறது. கதையின் பாதையைப் பார்வையாளர்கள் உள்வாங்கிக்கொள்ள இடைவேளை வரை காத்திருக்க வேண்டிய நிலையில், சண்டைக் காட்சிகளாலும், குற்றவாளிகளைத் தேடிப் பிடிக்கும் சொற்ப காட்சிகள் மூலமாகவும் முதல் பாதியை கடக்க உதவியிருக்கிறார் அருண் விஜய்.




இடைவேளைக்குப்பின் கதைக்குள் நுழையும் படத்தில் விறுவிறுப்பை கூட்ட முயன்றிருக்கிறார் இயக்குநர். ஆனால், அந்த முயற்சியும் கூட ஒரு கட்டத்திற்கு பிறகு எளிதாக கணிக்க கூடிய காட்சிகளாலும், சவால்கள் இல்லாத திரைக்கதையாலும் எடுபடவில்லை. அருண் விஜய் மேற்கொள்ளும் விசாரணை திருப்பங்களோ, விறுவிறுப் போயின்றி சுரமில்லாமல் கடப்பதால் ஒட்டுவதற்கு போராட வேண்டியிருக்கிறது.

ஷபீரின் பின்னணி இசை விசாரணைக் காட்சிகளை விறுவிறுக்க வைக்க முயன்றிருக்கிறது. பாடல்கள் எதுவும் மனதோடு தோயவில்லை. கோபிநாத்தின் ஒளிப்பதிவு சண்டைக்காட்சிகளின் அழுத்தத்தை திரைக்கு வெளியே பதியவைக்க பெரும் உதவி புரிகிறது. அதோடு, ராஜா முகமதின் கச்சிதமான காட்சித்தொகுப்பு திரைக்கதை அயற்சியை குறைக்க முடிந்த அளவுக்கு முயன்றிருக்கிறது.

இவை எல்லாவற்றையும் தாண்டி, தமிழ்த் திரைப்பட 'சினம்' குடிசைப் பகுதிகளில் வாழும் உழைக்கும் மக்களைக் குற்றவாளிகளாக்க முயன்றிருப்பது வேதனை. குற்றம் என்றதும் காவலரான அருண் விஜய் வாகனம் அந்த மக்களின் குடியிருப்புகளுக்குள் செல்வதும், கானா பாடும் இளைஞர்களிடம் மட்டும் கஞ்சா புழங்குவதாகக் காட்டுவதும் நெருடல். தற்போதைய தமிழ் சினிமா வழக்கமான இந்தப் பாணிகளிலிருந்து மெதுவாகத் தன்னை மீட்டெடுத்து மீளாய்வு செய்து வரும் நிலையில் அப்படி சென்னையின் பூர்வகுடி மக்கள் மீதான பொதுசமூகத்தின் பொதுப்புத்தியை மீண்டும் கூர் தீட்டும் வகையில் 'சினம்' விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எளிய மக்கள் மீது நீளும் காவல் துறையின் கைகளும், அதிகாரக் குரல்களும், சொகுசு கார்கள் புழங்கும் பகுதிகளில் நீண்டுவிடுமா என்பதையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டியுள்ளது. மொத்தத்தில் வெறும் அழுத்தமான கருத்தை மட்டும் சுமந்துகொண்டு சுவாரஸ்யமில்லாத திரைக்கதை எழுத்தாலும், கருத்தியல் ரீதியான தடுமாற்றத்தாலும் சினத்தின் ஆக்ரோஷம் திரையில் தெறிக்கத் தவறியிருக்கிறது.

# சிறார் சினிமா



## புரிதலும் புரிய வைத்தலும்

ஜெயந்தன்

தமிழ்நாடு அரசு பாடசாலைகளில் ஒரு சிறந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. அரசுப் பாடசாலைகளில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வாரம் சிறார் திரைப் படம் ஒன்றைத் திரையிட்டு அதன் பின்னர் அப்படம் குறித்த மாணவர்களின் எதிர்வினைகளைப் பெற்று அவர்களை திரைப்படம் பார்க்கும் நுட்பம் தொடர்பில் ஊக்குவித்தல் என்பதே அந்தப் புதிய திட்டம். தமிழ்நாடு அரசின் இந்தத் திட்டம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டின் தமிழ்த் திரைப்படங்களைப் பார்த்து ஈழத் தமிழ் இளைஞர்களும் கெட்டுப்பேபாகிறார்கள் என்றும் திரைப்படங்களைப் பார்த்தே வாள்வெட்டுக் குழுக்கள் உருவாகியிருக்கின்றன என்றும் குற்றச்சாட்டுக்களை அடுக்கி வரும் சமூகமாக நாமும் தமிழ்நாடு அரசின் புதிய திட்டம் குறித்து அக்கறைப்படுதலும் அது தொடர்பில் பரிசீலித்தலும் அவசியமானது.

பெரும்பாலான மேலை நாடுகளில், மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு 'ஃபிலிம் அப்ரிசியேசன்' என்கிற சினிமா ரசனையை வளர்க்கும் பாடவேளை உண்டு. அதில் திரைமொழி குறித்தும் அக்கலையை எப்படி அணுகுவது என்றும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

பிறகு அதே மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும்போது, அங்கே செயல்படும் 'பிலிம் சொசைட்டி'கள் திரையிடும் தரமான திரைப்படங்களைப் பார்த்துத் தங்களது திரைப்பட இரசனையை மென்மேலும் வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு கிடைத்துவிடுகிறது. ஆனால், கடந்த நூறாண்டுகளில் சினிமாவை நாம் பொழுதுபோக்கு என்பதாகவே புரிந்து வைத்திருக்கிறோம்.

மக்களைப் பெரிதும் பாதிக்கும் ஓர் ஊடகம் என்று சினிமாவை மேம்போக்காக சொல்லி வந்திருக்கிறோமே தவிர, அது பற்றிய ஒரு தீவிரமான விவாதத்தை நாம் முன்னெடுத்ததே இல்லை என்பது தான் உண்மை. அதற்கான காரணமும் வெளிப்படையானது. சினிமாவை உருவாக்குபவர்கள், அதைக் காணும் பார்வையாளர்கள் ஆகிய இரண்டு தரப்பினருமே 'சினிமா ரசனை' என்பது பற்றி அறிந்துகொள்ளாமலே சினிமாவை படைப்பவர்களாகவும் பார்ப்பவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

உலக அளவில் சினிமாவுக்கு 120 ஆண்டுகள் வரலாறு இருக்கிறதென்றால், அது தமிழ் சினிமாவுக்கும் பொருந்தும். இந்த 120 ஆண்டுகளில் 'சிறார் சினிமா' எடுக்காதது நாங்கள் செய்த பெருங்குற்றம். தமிழ் மொழியில் சிறார்களுக்காகவே எடுக்கப்பட்ட படங்கள் என்று தேடினால் பெரும் ஏமாற்றமே முகத்தில் அறையும்.

நமக்கு வசதிப்படும்போது "சினிமா ஒரு பொழுது போக்கு" என்று பேசுகிறோம். அப்படிப் பேசிகொண்டே "சினிமா மாற்றத்தைக் கொண்டுவரும் சக்தி வாய்ந்த கலை" என்றும் பேசுகிறோம். இந்தக் குழப்பம் நம் சுய நலம் சார்ந்ததாக இருக்கிறது. பால் என்பது பாலாகவும் தண்ணீர் என்பது தண்ணீராகவும்தான் இருக்கமுடியும்.



ஆனால், இந்த இரண்டுக்குமே நாம் இடமளித்திருப்பதைப் போலவேதான் சினிமாவுக்கும் இடம் தந்திருக்கிறோம். சினிமாவைப் பொழுதுபோக்கு என்றே வைத்து கொண்டால், குழந்தைகளுக்குத்தான் பொழுதுபோக்கும் கேளிக்கையும் அதிகமாகத் தேவைப்படுகிறது. இந்த உண்மையை படைப்பவர்களும் உணரவில்லை, அதற்குப் பணம் போடுகிறவர்களும் உணரவில்லை என்பதுதான் நூறாண்டு தமிழ் சினிமா வரலாற்றில் கசப்பான உண்மை.

**புரிதலும் பாதையும்**

சினிமா ஒரு வியாபாரம், இதில் முதலீடு செய்தால் நிறைய லாபம் சம்பாதிக்க முடியும் என்பதே சினிமாவின் மீது இதுவரை நாம் வைத்துள்ள ஒற்றைக் கோணம். ஆனால், மேலை நாடுகளில், ஹாலிவுட்டில் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், பொழுதுபோக்கு என்பது குழந்தைகளுக்கான விஷயம் என்பதில் சிறந்த புரிதலைக் கொண்டிருக்கிறார்கள்.

நூறு வயதானாலும் எல்லாருக்குள்ளும் ஒரு குழந்தை மனம் இயங்கிக் கொண்டேதான் இருக்கும். எனவே குழந்தைகளுக்காகப் படமெடுத்தால் அது பெரியவர்களுக்கான படமும் தான் என்பதை தெளிவாக விளங்கிக்கொண்டு, 'சிறார் சினி'க்களை தொடக்கம் முதலே அதிக எண்ணிக்கையில் கொடுத்து வருகிறார்கள்.

இந்தப் புரிதலும் சிறார் சினிமாவில் அவர்களது பாதையும் அங்கே சார்லி சாப்ளின் காலத்திலேயே தொடங்கிவிட்டது. மிக்கி மவுஸ் தொடங்கி டின் டின் வரை எண்ணற்ற கதாபாத்திரங்களால் அவர்கள் சிறார்களின் உலகைச்செழுமைபடுத்தியிருக்கிறார்கள். 2டி, 3டி அனிமேஷன் தொழில்நுட்பம் வளரவளர சிறார் சினிமாவை அறிவியல் புனைவாகவும் ஃபேண்டஸி புனைவாகவும் இன்னும் வேறு வேறு வகைமைகளில் வெகுவாக அங்கே வளர்த்தெடுத்து விட்டார்கள். அவற்றையேதான் நாமும் இன்றுவரை சிறார் சினிமாவாகப் பார்த்து வருகின்றோம்.

ஹாரிபாட்டர், ஜுராசிக் பார்க் போன்ற சிறார் படங்களைக் கொடுக்க அங்கே வளர்தெடுக்கப்பட்ட 'சிறார் இலக்கிய'மும் கைகொடுத்தது. நம்மிடம் சிறார் இலக்கியமும் இல்லை என்பது இன்னும் துயரமான யதார்த்தம். அங்கே 'சிண்டலர்ஸ் லிஸ்ட்' எடுத்த அதே ஸ்டீவன் ஸ்பீல்பர்க்தான் சிறார்களுக்காக 'ஜுராசிக் பார்க்'கும் 'டின் டின்'னும் எடுத்தார். அதுவும் புகழ்பெற்ற சிறார் காமிக்ஸ் சாகசக் கதையிலிருந்து 'டின் டின்'னை எடுத்தார். இவை அனைத்துமே பொழுது போக்கு சினிமாக்கள்தான்.



எங்கே தவறினோம்..

அதுவே, நாம் பொழுதுபோக்கு சினிமா எடுக்கும்போது குழந்தைகளை கணக்கில் வைத்துக்கொண்டதே கிடையாது. ஆனால், இன்றைக்கும் தமிழ் குழந்தைகள் மிகவும் விரும்பிப் பார்ப்பது 'மாஸ்' கதாநாயகர்களின் படங்களைதான். அந்தப் படங்களில் வரும் நகைச்சுவை தருணங்கள், குடும்பத் தருணங்கள், நடனம், பாடல் ஆகியவற்றைக் கண்டு களிக்கும் சிறார்கள், அதே படத்தில் வரும் வன்முறைக் காட்சிகள், காதல் காட்சிகள் உட்பட அவர்களுடைய வயதுக்குத் தேவையில்லாத, தேவைப்படாத பல விஷயங்களையும் உள்வாங்கிகொண்டு, தேவையற்ற சுமைகளை திரையரங்கிலிருந்து கொண்டு செல்கிறார்கள்.

இப்படி தங்களையறியாமல் உள்வாங்கிக்கொண்ட அனைத்தும் அவர்கள் பதின்ம வயதைக் கடந்ததும் அவர்களுடைய குணாதிசய மாற்றங்களில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்குகின்றன. அப்போது போய் அவர்களிடம் "காதல் பற்றிய உனது புரிதல் தவறானது" என்றோ, "வன்முறை வாழ்க்கையையே அழித்துவிடும்" என்றோ வகுப்பெடுத்தால்' அது தும்பை விட்டு வாலைப் பிடிப்பதற்குச் சமம். நாம் நமது சினிமாக்கள் வழியாக நமது சிறார்களுக்கு இதைத்தான் தந்துகொண்டிருக்கிறோம்.

**மாணவர்கள் - பெற்றோர் - ஆசிரியர்கள்**

குழந்தைகளை நடிக்க வைத்து படமெடுத்தால் மட்டுமே அது குழந்தைகள் படமாக ஒருபோதும் ஆகிவிடாது. வளர்ந்த மனிதர்களைப் போல் பேசும் சிறார் கதாபாத்திரங்களை பொழுதுபோக்கு சினிமாவில் புகுத்திச் சாதனை படைத்திருக்கிறோம். இது வேண்டுமென்றே செய்த தவறு அல்ல. புரிதல் இல்லாததினால் செய்த தவறு.

பொது நிகழ்வுகளில் சிறுவர்களை "கல்யாணம்தான் கட்டிகிட்டு ஓடிப் போலாமா?" என்கிற சினிமாப் பாடலுக்கு ஆட வைக்கிறார்கள். அந்தப் பாடலும் அதில் பொதிந்திருக்கும் உணர்ச்சியும் உள்ளர்த்தங்களும் அதற்கு நடனமாடிய குழந்தைகளுக்கானது அல்ல. அது தெரிந்திருந்தும் சிறார்களை அத்தகைய பாடல்களைப் பாடவும் அதற்கேற்ப ஆடவும் வைத்துப் புளகாங்கிதம் அடையும் அற்பப் பெரியவர்களாக இருக்கிறோம் நாம்.

சிறார்களுக்கு நற்குணங்களைப் போதிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் நற்குணங்களோடுதான் பிறக்கிறார்கள். நாம்தான் "சரிப்படுத்துதல்" என்கிற பெயரில் அவர்களை "இன்கரெக்ட்" செய்ய முயல்கிறோம். ஆக, சிறார் சினிமா என்பது குழந்தைகளுக்கான நற்குணங்களைப் போதிப்பதாக இருக்கவேகூடாது.

மாறாக, சிறார் சினிமா என்பது அவர்களின் கற்பனைத் திறனைப் பெருக்குவதாகவும் வளர்ப்பதாகவும் அதை விரிவாக்குவதாகவும் இருக்க வேண்டும். கற்பனைத் திறனை பெருக்கும் சினிமாக்கள் வழியே, கணிதம், அறிவியல், இலக்கியம், இசை, ஓவியம் உள்ளிட்ட மற்றப் பாடங்களில் மாணவர்கள் சிறந்து விளங்க ஊக்கம் கிடைக்கும். இந்த ஊக்கம் பொழுதுபோக்கு சினிமாக்

கள் வழியே கிடைக்காது.

குழந்தை பருவத்தில் சிறார்கள் நாம் கவனிக்க முடியாத சிலவற்றுக் குக்கூட சிரிப்பதைப் பார்க்கமுடியும். இதற்குக்கூட அவர்கள் சிரிப்பார்களா என்பதைப் பெரியவர்களால் கண்ட றிய முடியாது. அதே குழந்தைக ளுக்கு, "பனங்கொட்டைத் தலையா..!" "தேங்காய் துருவிப் பல்லா?" என்று உருவக்கேலி செய்யவும் சக மனி தனை அடித்து துன்புறுத்துவதைப் பார்த்து சிரிக்கவும் நமது சினிமாக்கள் வழியே சொல்லிக்கொடுத்தி ருக்கி றோம்.

இந்தப் போக்கு மாற்றப்படவேண் டும். அதற்கு முன்னோடியான ஒரு திட்டத்தைப் பாடசாலையில் தொடக் கியிருக்கிறது தமிழ்நாடு அரசு. நாம் என்ன செய்யப்போகிறோம்? எதிர் காலச் சந்ததி பற்றிச் சிந்தித்துச் செயற் படப் போகிறோமா அல்லது குற்றச் சாட்டுக்களைள மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கப் போகிறோமா?

---

# "புலிகளின் தாக்குதலில் தப்பி முதலையிடம் கடிபட்டோம்"

**கமலநாதன்**

லபிள்யு ஏ பிறேமதிலக என்பவர் இலங்கைச் சிறப்புப் படைப் பிரிவின் மோட்டார் சைக்கிள் படையணியில் 1986இல் இணைந்தவர். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் புலிகளுடன் பல்வேறு தாக்குதல் களில் ஈடுபட்டார். அவர் தனது அனுபவங்களை வெனச யூரியூப் தளத்தில் கீழ்வருமாறு பகிர்ந்தார்.

60 மோட்டார் சைக்கிள்களைக் கொண்ட எமது அணி பல்வேறு பகுதிகளுக்குச் சென்று தாக்குதல்களை நடத்தி யது. படையினர் படை நடவடிக்கை ஒன்றை முன் னெடுக்கும்போது கொமாண்டோ அணியினரும் எமது படையணியும் சிறப்புச் செயற்பாடுகளுக்காக அழைக்கப் படுவது வழக்கம்.

**ஓமந்தைத் தாக்குதல்**

ஓமந்தைப் பகுதித் தாக்குதலுக்குக் கேணல் ஜயம்பே தலைமை தாங்கினார். ஓமந்தை முதன்மை வீதியில் புலிகளால் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடையை உடைத்து அழிப்பதே அந்தப் படை நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது. இதற்காக 3 நாள்கள் அல்பாப் படையணியுடன் சேர்ந்து பயிற்சிகளை எடுத்தோம். 60 மோட்டார் சைக்கிள்களில் வவுனியாவில் இருந்து புறப் பட்டு அதிரடியாகப் புலிகளின் நிலைகளைத் தாக்கிவிட்டு 40 நிமிடங்களில் மீண்டும் வவுனியாவுக்குச் செல்வதே எமது திட்டமாக இருந்தது.

புலிகளின் பாதைத் தடைக்கு வடக்காகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உலங்கு வானூர்தி மூலம் அல்பாப் படையணியினர் இறங்குவார்கள் என்றும் நாம் முன்னரங்கில் தாக்குதலை நடத்தும்போது இறக்கப்பட்ட அல்பா அணியினர் புலிகளின் அரணுக்குப் பின்புறமாகத் தாக்குதலை நடத்தியவாறு முதன்மை வீதியால் வவு னியா திரும்புவது என்றும் திட்டமிடப்பட்டது.

நாங்கள் தாக்குதலை நடத்தி உள்ளே புகுந்தபோது புலிகளின் பெரிய களஞ்சியசாலை ஒன்று அங்கிருந்தது. இலங்கைக் காவல்துறையினரிடமிருந்து கைப்பற்றிய ட்ரக் வண்டி, டிரக்ரர் ஆகியன அங்கு காணப்பட்டன. அந்த வாகனங்களை எடுத்துச் செல்ல முடியாததால் அவற்றை எரித்தோம். இந்தச் சண்டையில் 45 புலிகள் கொல்லப்பட்டனர். திட்டமிட்டபடி தாக்குதலை வெற்றி கரமாக மேற்கொண்டோம். தாக்குதல் முடிந்து வேகமா கத் திரும்பும்போது எனது மோட்டார் சைக்கிளின் முன் சில்லு ஆமட் கார் ஒன்றுடன் மோதியதால் தூக்கி வீசப் பட்டேன். காயப்பட்ட என்னை உடனடியாக மருத்துவ மனைக்கு ஏற்றினார்கள்



**சித்தாண்டித் தாக்குதல்**

மட்டக்களப்புச் சித்தாண்டிப் பாடசாலையில் தங்கியி ருந்தோம். செங்கலடி கறுத்தப் பாலத்திலிருந்து மகா ஓயா வரை பாதையின் இருமருங்கும் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று எமக்குப் பணிக்கப்பட்டது. அந்தப் பகுதி காட்டுப் பகுதி. காட்டுச் சண்டையில் அனு பவம் வாய்ந்த கருணா அணி அங்கு மிகவும் பலமாக இருந்தது. இந்தப் படை நடவடிக்கையில் மோட்டார் சைக் கிள்களில் செங்கலடி வீதியிலிருந்த கறுப்புப் பாலத்தை நெருங்கும்போது புலிகள் தாக்குதலை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்த்ததோம். அவ்வாறு நடக்கவில்லை.

# பட்டை தீட்டினால் பயனில்லை...?



யாழ்ப்பாணத்தவர்கள் அதிகம் உண்பது புழுங்கல் அரிசி என்கிற குத்தரிசிச் சோறாகும். குத்தரிசியைப் பொதியாக்கி விற்பனை செய்யும் நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்திருக்கின்றன. கிலோவுக்கு 300 ரூபாயைத் தாண்டியதாக அவற்றின் விலை அண்மைய காலத்தில் அதிகரித்திருந்தது. குத்தரிச் சோற்றை மதிய உணவாக உள்ளெடுக்கப் பழக்கப்பட்டுவிட்ட நம்மவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இப்போது விலையேற்றம் சற்றுத் தளர்வடைந்துள்ளது. குத்தரிசியை அதிகம் உண்ணப் பழக்கப்பட்டுக்கொண்ட நம்மவர்கள் வெள்ளையின மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசி வகைகளையும் நுகர்கிறார்கள். உள்ளூர்த் தானிய வகையில் தங்கியிராது மெல்ல மெல்ல மக்களின் நுகர்ச்சி வெள்ளை இன அரிசிகளின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில் நெல் மாத்திரமல்லாமல் எந்தவொரு தானிய வகையானாலும் அதைப் பட்டை தீட்டும்போது அதிலிருந்து கிடைக்கின்ற ஊட்டங்கள் குறைவடையும் என்கிற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

**தேனுகா**

**புழுங்கல் அரிசி என்கிற கருவாட்டரிசி**

நெல்லை அவிக்கும்போது நெல் மணிகள் பூரிப்படைந்து - உடைந்து உமிக்கு உள்ளேயிருக்கும் அரிசி வெளித்தெரியும். அதை வெயிலில் உலர வைத்துப் பின்னர் உமியை நீக்கித் தீட்டிச் சோற்றுக்குப் பயன்படுத்துகிறார்கள். இதையே குத்தரிசி அல்லது புழுங்கல் அரிசி என்கிறார்கள். அரிசியை நெல்லுடன் சேர்த்து அவித்து வெயிலில் உலரவிட்டு எடுத்துப் பத்திரப்படுத்திப் பயன்படுத்துகிறார்கள். கிட்டத்தட்ட வெயிலில் உலர வைத்துப் பெற்ற கருவாட்டுக்கு ஒத்த முறையில் புழுங்கல் அரிசி தயாராகிறது. இதையே பின்னர் சோறாக்கி உண்கிறார்கள்.

வெள்ளையின அரிசிகளுடன் ஒப்பிடுகையில் புழுங்கல் அரிசி அதிக சத்துகளைக் கொண்டிருந்தாலும் அரிசியைச் சூழ்ந்திருக்கின்ற தவிட்டைப் பட்டை தீட்டிப் பாவிப்பதால் அதன் முழு ஊட்டத்தையும்

கறுப்புப் பாலத்தைத் தாண்டி 3 கிலோ மீற்றர் வரை உள்ளே சென்ற பின்னர் புலிகள் தாக்கினார்கள். பதிலுக்கு நாங்களும் தாக்கினோம். எமக்குப் பின்னால் கப்டன் கீம் பல்ல தலைமையிலான ஆமட் கார் படை அணி வந்துகொண்டிருந்தது. தாக்குதலின் அகோரத்தால் அந்த அணி பின்வாங்கிவிட எமது அணி மாத்திரம் புலிகளின் பகுதிக்குள் நின்றது. புலிகளின் ஆர்.பி.ஜி. தாக்குதலில் எமது படைப்பிரிவில் ஒருவருக்கு இடுப்புக்கு மேற்பகுதி துண்டாடப்பட்டது. மோட்டார் சைக்கிளும் அவரது கால்களும் 25 மீற்றர்களுக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டன. அந்தத் தாக்குதலில் எமது 8 மோட்டார் சைக்கிள்களைப் புலிகள் கைப்பற்றினர். எமது அணி ஓரிடத்துக்கு வேகமாகச் சென்று தாக்கும் படையணியே தவிர அந்தப் பகுதியைத் தக்க வைக்கவோ, நிலைகொள்ளவோ எந்த ஏற்பாடும் இல்லாத அணி.

வேறு வழியின்றி மோட்டார் சைக்கிள்களைப் பேட்டுவிட்டு களப்புத் தண்ணீருக்குள் இறங்கினோம். தேங்காய் உரி மட்டைகளை எடுத்துத் தலைக்கவசம் போல தலையில் வைத்துக் கொண்டு தண்ணீருக்குள் இருந்தோம். அவ்வாறு பதுங்கியிருந்த போது எமது அணியில் ஒருவரை வாவியிலிருந்த முதலை கடித்தது. அவரது முழங்கைக்குக் கீழான பகுதியை முதலை கடித்துக் கொண்டு போய்விட்டது. அதிகம் குருதி வெளியேறியதால் காயத்தைத் துணியால் சுற்றிக் கட்டிக் குருதி போவதைக் கட்டுப்படுத்தினேன். சம்பவம் நடந்த போது இரவு 2 மணி.

நாம் எங்கு நிற்கிறோம் என்று அடையாளம் காண முடியவில்லை. செங்கலடிப் பகுதியில் நின்ற படையினரிடம் செங்கலடிப் பகுதியை அடையாளப்படுத்துவதற்காகக் கான் பராலைற்றை அடிக்குமாறு தொடர்புக் கருவியில் கூறினேன். அவர்களும் அவ்வாறே அடித்தார்கள். அதை வைத்துச் செங்கலடித் திசையை அறிந்து கொண்டோம். காலை 7.30 மணியளவில் அவ்விடத்தை அடைந்தோம். முதலை கடித்தவரை பொலன்னறுவை மருத்துவமனைக்கு அனுப்பினோம். (தொடரும்)

இழக்கும் வாய்ப்பை நம்மவர்களே ஏற்படுத்துகிறார்கள். அதிக தவிடு கயர்ப்புச் சுவையை ஏற்படுத்தும் என்று சுவைக் குறைவைக் காரணம் சொல்லித் தவிட்டைத் தவிர்க்கி றார்கள்.

**பட்டை தீட்டும் பழக்கம்**

தானியங்கள் மற்றும் அரிசி வகை களைப் பட்டை தீட்டும் பழக்கம் எவ்வாறு ஏற்பட்டது என்று தெரி யாவிடினும், தொடக்க காலங்களில் தவிடு அதிகமுள்ள நெல் அரிசிச் சோற்றையே அதிகம் முன்னோர்கள் உள்ளெடுத்து வந்துள்ளனர் என்கிற கருத்துப் பரவலாகக் காணப்படுகிறது. ஆனால் இப்போதெல்லாம் சுவை யைக் காரணம் காட்டித் தானியங்கள் அதிகம் பட்டை தீட்டப்படுகின்றன. இவ்வாறு பட்டை தீட்டப்படுவதால் அதிகளவான ஊட்டச் சத்துக்கள் இழக்கப்படுகின்றன. இதனால் நோய் வாய்ப்படுவது அதிகரிக்கிறது. இந்த விடயம் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்படவில்லை. முதலாம் உலகப் போர்க் காலத்தில் தற்செய லாகத் தெரியவந்திருக்கிறது.

**பட்டை தீட்டாத தானியங்களால் அதிக ஆயுள்**

முதலாம் உலகப் போர்க் காலத் தில் டென்மார்க்கில் உணவுப் பற் றாக்குறை ஏற்பட்டபோது அதை ஈடுசெய்வதற்காகத் தானியங்களைப் பட்டை தீட்டாது முழுமையாக அரைத்து நுகர்வுக்கு விநியோகித் திருக்கிறார்கள். உமி, தவிடு என்பன வற்றை நீக்காமல் மாவாக்கியதால் 20சதவிகித உணவுற்பத்தி அதிக மாகக் கிடைத்திருக்கிறது. அதனால் உணவுப் பற்றாக்குறை நெருக்கடி யைச் சமாளித்திருக்கின்றனர். அடு த்த ஆண்டில் டென்மார்க் மக்களின் இறப்பு வீதம் 35 சதவீதம் குறைந்து காணப்பட்டுள்ளது. இதற்குரிய கார ணத்தை ஆராய்ந்தபோது பட்டை தீட்டாத மாவை உண்டதால் நீரிழிவு, மாரடைப்பு, தொற்றுநோய் ஆகிய நோய்கள் குறைந்திருப்பது தெரியவந்தது. நீரிழிவு, குருதிக் கொதிப்பு, புற்றுநோய் ஆகிய நோய் களுக்கு அடிப்படைக் காரணியாகப் பட்டை தீட்டிய தானியங்கள் இருக் கின்றன என்று கண்டறியப்பட்டது.

பட்டை தீட்டப்பட்ட தானியங் களை உண்பதால் குருதியில் சீனி யின் அளவு அதிகரிக்கிறது. இதனால் இன்சுலின் அதிகமாகிக் கொழுப்பு அதிகமாகக் குருதியில் தோன்றிக் குருதிக் குழாய்களை நிரப்புகிறது. இதைவிடப் புற்றுநோய் போன்ற நோய்களுக்கும் வழியேற்படுத்துகி றது. பட்டை தீட்டும் தானியங்களால் உடலுக்கு ஆரோக்கியம் இல்லை என்கிற இந்தத் தகவல் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.



தானியங்களைப் பட்டை தீட்டுவ தால் தூய்மையான, சுத்தமான, நல்ல நிறமுள்ள உணவு கிடைத்தாலும் அது ஆரோக்கியமற்ற - ஊட் டங்களை இழந்த உணவு என்பதைக் கவனத்தில் கொள்ளத் தவறக்கூடாது. பட்டை தீட்டாத தானியங்கள் இயல் பாகவே அழுக்குப்போன்ற பழுப்பு நிறத்தில் காணப்படுவதால் அவற் றைப் பட்டை தீட்டி வெண்மை நிற மாக்கிப் பயன்படுத்தும் பழக்கம் நம்மவர்களின் இயல்பாகியிருக்கிறது. இது ஆபத்தானது என்பதை இனி யாவது உணரவேண்டும். அவ்வாறு உணரும்போது புழுங்கல் அரிசியைப் பட்டை தீட்டாமல் பாவிக்க முற்படு வதுடன் நெல்லை உடைத்து உடை யல் அரிசியைப் பயன்படுத்துவோர் நம்மத்தியில் அதிகரித்திருப்பர்.

**பட்டை தீட்டாத மாவை உண்டதால் நீரிழிவு, மாரடைப்பு, தொற்றுநோய் ஆகிய நோய்கள் குறைந்திருப்பது தெரியவந்தது.**



# இதுதான் முடிவோ?

**கதிரேசன் காத்தவராயன்**

அண்டைக்கு மூளாய் ஆஸ்பத்திரியிலை என்ரை வருத்தமொண்டுக்கு டொக்ரர் ஒரா ளிட்டை காட்டுவமெண்டு வெளிக்கிட்டன். முருகேச ருக்கும் வட்டுக்கோட்டையிலை ஒரு அலுவலிருக் கெண்டு சொன்னது நினைப்பு வர "வாவன் போவம்" எண்டன். வந்தார். ரண்டு பேருமாய் சங்குவேலி வய லுக்காலை போய் சீரணிச் சந்தியிலை ஏறி காரைநகர் றோட்டாலை போவமெண்டு வெளிக்கிட்டம்.

சீரணிச்சந்தி வரைக்கும் சும்மா சொல்லக்கூடாது பாருங்கோ றண்வேதான், ஒரு கரைச்சலுமில்லை. அங் காலை இடைக்கிடையிலை பாத்தால் கிண்டிக் கிளறித் தான் கிடந்துது. "என்னப்பா கதிரேசண்ணை! பழசு களை மறந்திடுவமெண்டு விட்டுக்கிடக்கோ?" எண்டார் துள்ளி விழுந்த ஒரு இடத்திலை முருகேசர். "அப்பி டியோ! இல்லாட்டில் உந்த பறக்கிறவையை நிதானத் துக்குக் கொண்டு வரவோ தெரியாதப்பா.. இறுக்கமாப் பிடிச்சுக்கொண்டிரு" எண்டபடி றோட்டிலை கவனமாயி ருந்தன்.

அதிலை காரைநகர் றோட்டிலையிருந்து மல்லாகம் போகிற றோட்டுப் பிரியிற சந்தியிலையிருந்து மூளாய்க் குப் போகிற வரைக்கும் என்ரை வாழ்க்கையிலை காணாத கேள்விப்படாத கேவலத்திலை கிடந்துது றோட்டு. "என்னப்பா கதிரேசு எந்த உலகத்திலை நிக் கிறம்? உனக்கேதும் விளங்கூதோ?" எண்டு கேட்டார் முருகேசர். நான் கதைக்கிற மூட்டிலை இல்லை. கிடங் குகள் கல்லுகள் எண்டு விலத்திறதிலைதான் என்ரை முழுக் கவனமும். "கதைக்கிறதை விட்டிட்டு கவனமா யிரு" எண்டன். பாவம் பேசாமலிருந்தார்

சங்கானை ரவுணுக்கைதான் றோட்டு வலுமோசம். மெதுவாய் போய்க்கொண்ருந்தம். "என்ன கதிரே சண்ணை கிடங்குகளை எண்ணுறியளே?" எண்ட குரலுக்கு டக்கெண்டு நிப்பாட்டிற அவசரமில்லாமலே நிண்டிட்டன். கிட்டத் தட்ட உருட்டுற வேகந்தானே? அதாலை நிக்கிறது வசதியல்லே? சங்கரப்பிள்ளையர் சைக்கிளோடையும் ஒரு சிரிப்போடையும் நிண்டார். "அட எங்கட சங்கரப்பிள்ளை யண்ணை! என்னப்பா காப்பெற் றோட்டு......" எண்டுகொண்டு இறங்கி நாரியை நிமித் தினார் முருகேசர்.

"கடையளை அகட்டி வடிகான் வெட்டி னாத்தான் றோட்டு எண்டாங்கள். கானு மில்லை றோட்டுமில்லை..." எண்டார் எரிச்சலோடை சங்கரப்பிள்ளையர். "முந்திக்கூட இப்பிடிக் கேவலமாயில்லை, என்ன?" எண்டு நான் கேட்டன். எரிச்ச லோடை "பின்னையென்ன கதிரேசண்ணை கிடந்ததைக் கிளறியல்லே நாசமாக்கிக் கிடக்குது. முந்தியெண்டால் விலத்திக் கிலத்தி போக வர முடிஞ்சல்லே கிடந்தது. இப்ப மழை தொடங்கட்டன், பள்ளமெது கிடங்கெதெண்டு தெரியமல் என்ன நடக் கப்போகுதோ?" எண்டார் பெருமூச்சை விட்டபடி.

"ஏன் பெரியாக்களொருத்தரும் இந்த றோட்டைப் பாவிக்கிறதில்லையோ?" எண்டு முருகேசர் கேட்டார். "விலத்தி இஞ்சாலை நில்லப்பா" எண்டு பதட்டமாய்ச் சொன்னார் சங்கரப்பிள்ளை. நான் கரையோடை நல் லாய் விலத்தவும் பறந்தடிச்சபடி டிப்பரொண்டு போச் சுது பக்கத்தாலை. புழுதி சுழண்டெழும்பி மூடிச்சுது. அது கலையிற நேரம் பாத்தால் ரண்டு பொலிஸ்காறர் புழுதியை கையாலை விசிறிக்கொண்டு நிண்டிட்டு தங் கடை பயணத்தை தொடங்கிச்சினம். "பாவங்கள் அது களை டிப்பர்காறர் மதிக்கிறாங்களோ பாருங்கோ?" எண்டார் சங்கரப்பிள்ளையர்.

"இவங்களில்லாட்டியும் இவங்கடையாக்கள் அவங் கடை கூட்டாளியளாயல்லே இருப்பங்கள்..." எண்டு முருகேசர் வாயை மூடயில்லை சீரீபீ பஸ்சொண்டு டிப்பர் எப்பிடிப் போச்சோ அதைவிடக் கொஞ்சம் வேக மாப் போய் பஸ் ஸ்ராண்டுக்கை பிறேக் இழுபட்ட நிண் டுது. "பாத்தியளோ இதுகளுக்கை தப்பியும்தான் நட மாடவேண்டிக் கிடக்குது என்ன?" எண்டன். சிரிச்சினம்.

நாங்கள் வந்த காரணத்தைக் கேட்ட சங்கரப்பிள் ளையர் பிலத்தாச் சிரிச்சார். "இதுக்கே சலிக்கிறியள் உங்காலை என்னண்டு போகப்போறியளோ?" எண் டிட்டு பிறகும் சிரிச்சார். "ஏனப்பா சொல்லிப்போட்டுச் சிரிச்சால் நாங்களும் சிரிப்பமல்லே?" எண்ட கேட்டார் முருகேசர். "இதைவிட வலு திறமான கிடங்குகள், கல் லுகள், பள்ளங்கள் உங்கலைதான் கிடக்கு. அதைவிடப் பெருக்கன் கல்லுகளை றோட்டிலை கொட்டி காயவும் விட்டுக்கிடக்கு" எண்டார் எரிச்சலோடை சங்கரப்பிள் ளையர்.

முருகேசர் என்னை ஒரு மாதிரியாப் பாத்தார். பாவ மாக் கிடந்துது. "இஞ்சார் முருகேசு வருத்தம் கூடிச் செத் தாலும் பறவாயில்லை. உன்ரை வட்டுக்கோட்டை அலுவலோடை திரும்புவம் என்ன?" எண்டன். முரு கேசற்றை முகத்திலை ஒரு மினுக்கம். சங்கரப்பிள்ளைய ரிட்டைச் சொல்லிக்கொண்டு வெளிக்கிட்டிட்டம்.

# எமையறிதல்

77

ஐயங்கொண்டான் சுவாமிகள்



நாம் எதையும் ஏலவேயிருக்கிற அல்லது நம்புகிற கற்பனாச் சட்டகங்களுக்கூடாகப் பார்க்கிற நிலைமை இருக்கிறவரை அது தொடரப்படும்வரை 'நான்' என்கிற யதார்த்தமும் அதனது இயலுமைகளும் உணரப்படமுடியாத நிலையேதொடரும். யதார்த்தமாயுள்ள நானும் எனக்குள்ளேயே குடியிருக்கும் நானும் ஐக்கியப்படும்வரை நிலையாதல் என்பது விலகியபடியே சென்றுகொண்டிருக்கும். வேறு வழிகள் தென்படாதேயிருக்கும்.

நிலையாதல் என்பதும் ஒரு வகைப்பட்ட துறவா? நிலையானது என்று குறிப்பிட்டு வடிவம், குணம், பண்பு எனக் கருதக்கூடியதான ஏதும் உள்ளனவா? நிலையானதென்று ஒன்று இருக்கிறதா? அப்படியிருக்கக்கூடிய வாய்ப்புகளேதுமாயினும் உள்ளதா? ஆக, நிலையானது பற்றி உணர்ச்சி பொங்கப் பொங்கப் பேசுகிறோம். அதே வாயால் நிலையாமை பற்றியும் பேசுகிறோம். எது விசுவாசமாக நாம் பேசியது? நிலையாதலா? நிலையாமையா?

கடவுள் என்கிற மனித உருவாக்கத்துடன் ஐக்கியமாதல் என்பதை நிலைபேறடைதல் எனக் கொண்டாடுகிறோம். அதற்காகவே துறவு மேற்கொள்வதாகக் கூறி அதாவது ஆசைகளைத் துறப்பதாகக் கூறியபடியே பேராசை கொண்டலைகிறோம். அதுதான் யதார்த்தம். ஆனால் ஏற்க மறுக்கிறோம். உருவகிக்கப்பட்ட ஒன்றுடன் ஐக்கியமாதல் என்பது எங்கே சாத்தியமாகும்? மனதிலுள்ள ஒன்றுடன் என்பதை மறந்து அல்லது மறுத்து எங்கெங்கோ அலைகிறோம். அவ்வளவுதான்.

நிலைத்தல் என்பது அப்படியே மாற்றமெதுவுமே இன்றித் தொடர்ந்தும் இருப்பது என்றால் அப்படி எடுத்துக்கொண்டால் நிலையாமை என்பது மாறுவது. மாற்றங்களுக்கு உட்படுவது. மாற்றமொன்றே மாறாதது என்கிறோமே அது என்ன? எதனை நிலைத்தல் என்கிறோம்? அது என்ன? எமக்குள் நாமே முரண்பாடுகளைத் தோற்றுவித்து எமக்கு நாமே எமக்குள் நாமே போராடகிறோம். அறிந்தும் அறியாமலும் தொடர்கிற சிக்கலுடன்தான் நாளாந்தம் அல்லாடுகிறோம் என்பதை உணர முடிகிறதா?

எந்தவொரு விடயமும் அப்படியே இருப்பதில்லை. தனக்குள்ளாகவே அழிகிறது. உரு மாறுகிறது. குறைகிறது. கூடுகிறது. ஒன்று எப்போதுமே அதுவாகவே இருந்துவிடுவதில்லை. எனக்கே ஒவ்வொரு பொழுதிலும் வேறுவேறான பதிவை அல்லது அனுபவத்தைத் தரக்கூடியதாகவே ஒவ்வொன்றும் இருந்து வருகின்றன. எனதும் பிறனதும் என்கிறதான ஒன்று எப்பொழுதுமே பொருந்தி வரக்கூடிய சாத்தியங்களேதும் இருக்குமா? ஆக நிலைத்தல் என்பதற்கான பெறுமானம் என்ன?

நிலையாமை அல்லது மாறுதல் என்பது எத்தகையது? அதற்கான காலபிரமாணம் எவ்வளவு? கணிப்பிட முடியுமா? அளவு கோலென்றேதாவது உண்டா? எப்போதாவது சிந்தித்திருக்கிறோமா? நாம் மாறுதல் என்பதை முன்னிருந்த, ஒன்று அப்படியே இருக்கக்கூடாது என்பதாக வலிந்து நம்பவைக்கப்பட்டவர்களாக அல்லது நம்பியவர்களாகவே இருக்கிறோம். முன்னிருந்த ஒன்று பற்றிய விளக்கங்கள் அற்று வலிந்து மாற்றிவிடத் துடிக்கிறோம். அது மாற்றமா? இல்லவேயில்லை அது சிதைப்பு. அழிப்பு. எதையும் மாற்றக்கூடாதா?

மாற்றம் என்பது தேவை கருதியது. தன்னியல்பாக படிமுறையொழுங்கொன்றில் ஏற்பட வேண்டியது அவசியமானது. காலமெடுத்துத் தன்னை ஓரளவு தக்கவைத்துக்கொண்டு நிதானமாக நகர்வது. காலமும் சூழலும் சந்தர்ப்பமும் பொருந்தியதாக இருப்பது. இரவு படுக்கைக்குச் செல்கையில் இருந்த ஒன்று காலை துயிலெழுகையில் நிகழ்ந்திருக்க வாய்ப்பானதாக இருக்கவே முடியாதது. அரசியலில் அல்லது வணிகத்தில் சாத்தியமாயிருக்கலாம். கொள்கை அல்லது கருத்து நிலையில் அல்ல. ஆனால் அப்படியும் நம்பியலைகிறோம் என்பதும் யதார்த்தமானது.

நாம் வலிந்து மாற்றவிளைவது அழிப்பேதான். அது ஆசைவயப்பட்டது. ஆசையைத் திருப்பதிப்படுத்தவென முயலப்படுவது. திருப்தியென்கிற ஒன்றை அடைவது மட்டுமல்ல அண்மிப்பதே கடினமானது என்பதே யதார்த்தமாயுள்ளது. ஆனால் நம்ப மறுக்கப்படுகிறது. மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பது காலங்குறித்து செய்துவிட முடியாததொன்று என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியமானது. வலிந்து ஏற்படுத்தப்பட்ட மாற்ற

மென்பது அனேகமாக நீண்டகால விளைவுகளை ஆரோக்கியமான தாகக் கொண்டிருக்குமா என்பதும் கவனத்திலெடுக்கப்பட வேண்டியதே.

மாற்றமென்பது எப்போதுமே மனத்தினாலேயே அளவிடப்படுகிறது. மாறாததுஎன்பதும்கூட அவ்வாறானதே. இவ்விடத்தில் மாற்றினேன் என்றோ மாறிவிட்டேன் என்றோ உரிமை பாராட்டுவது எப்படியோ மாற்றவில்லை மாறவில்லை என்றோ கொண்டாடுவதும். இரண்டுமே அபத்தமானவை. அபத்தமான நினைப்புகளாகவோ அதன் வழியான விளைவுகளாகவோ இருக்கின்ற ஒன்றால் மனதை அமைதிப்படுத்திவிட முடியுமா? அபத்தமானவை என்பதுதான் என்ன? சிந்திப்போம்.

# தமிழ் பேசுவோம் ஈழத் தமிழில் பேசுவோம்

பொன்னி

ஈழத் தமிழர்களின் பேச்சுவழக்குத் தமிழாகட்டும், பாவனைத் தமிழாகட்டும் சில தனிப் பண்புகளைக் கொண்டிருக்கிறது. தமிழ் மொழி என்று பார்க்கையில் அயலிலுள்ள தமிழ்நாடு, ஈழம் ஆகியன மொழிக் கட்டமைப்பில் ஒருமித்திருந்தாலும் தமிழகத் தமிழர்களின் பேச்சு மொழிக்கும், ஈழத் தமிழர்களின் பேச்சு மொழிக்கும் நிறைய வித்தியாசங்கள், வேறுபாடுகள் இருக்கின்றன. அதைப்போலவே மலையகத் தமிழர்களின் பேச்சுமொழிக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களின் பேச்சுமொழிக்கும் உள்நாட்டளவில் அந்த வேறுபாடு நீடிக்கிறது. ஆனால், தமிழக மற்றும் மலையகத் தமிழர்களுக்குள் ஈழத்தமிழ்ப் பேச்சு வழக்கு மற்றும் மொழியியல் ஊடுருவாதிருக்கின்ற நிலையில் தமிழக மற்றும் மலையகத் தமிழ்ப் பேச்சு மொழிகள், பாவனைச் சொற்கள் ஈழ மற்றும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்குள் அதிகம் ஊடுருவியிருக்கின்றன. இது ஈழத் தமிழர்களின் தனித்துவ மொழியைக் கலப்புப் பண்பாட்டுக்குள் கொண்டுசேர்க்கிறது.



**இந்தியப் பேச்சுமொழிக் கலப்பு**

இலக்கியம், சினிமா, ஆடை - அணிகலன், சடங்குகள் எனப் பலவற்றையும் அயல் நாடான இந்தியாவிலிருந்து நகலெடுத்துக் கொள்ளும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்ற ஈழத்தவர்கள் தமக்குரிய தனித்துவத்தை - அடையாளத்தை இவற்றின் மூலம் இழந்து வருகிறார்கள். தொலைக்காட்சித் தொடர்கள், தென்னிந்திய சினிமாக்கள் இதில் பெரியளவில் பங்காற்றுகின்றன. அடிமட்ட மக்களை அதிகம் உள்ளீர்ப்பது இவையே. இதைப்போலவே கற்றுத்தேர்ந்த, மற்றும் எழுத்துத் துறையில் ஈடுபடுகின்ற ஈழத்தவர்களை இந்திய இலக்கியப் பரீட்சயம் பற்றியிருக்கிறது. அந்த வகையிலேயே சாதாரண மக்கள் தொடங்கி எழுத்தாளர்கள், ஊடகங்கள் என அனைத்து மட்டங்களிலும் ஊடுருவியிருக்கிறது

இந்த மொழிக் கலப்பு - இந்திய மொழிக் கலப்பு என்பது - நாகரீகமடைந்த மற்றும் எடுப்பான தன்மையைக் கொண்டிருக்கிறது எனும் ஒரு வகைப் பிரமையைத் தோற்றுவித்தவாறு புழக்கத்தில் காலூன்றியிருக்கிறது. பெருந்தேசமான அங்கு ஏற்படுகின்ற நகரீக முன்னேற்றமாகவும் அதைக் கருதும் நிலையிருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்று சிலகாலம் தங்குவோர் மலையகத் தமிழ்ப் பாணியில் கதைக்கும் நிலையையும், இந்தியா சென்று திரும்புவோர் தமிழகப் பேச்சு வழக்குச் சொற்களைக் காவி வரும் பழக்கத்தையும் கொண்டிருக்கின்றனர். தவிர இவ்விரு அயலாரும் ஈழத் தமிழைக் காவிச் செல்லும் பழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

**எழுத்துக் கலப்பு**

இந்தியாவில் தற்போது நிலவுகின்ற பேச்சு மொழி என்பது பிரித்தானியர்களின் காலணியாதிக்கத்துக்குப் பின்னர் பெருமளவில் ஆங்கிலமொழிக் கலப்பைப் பெற்றதாக இருக்கிறது. ஈழமும் பிரித்தானியக் காலணியாதிக்கத்துக்குக் கீழிருந்த தேசமானாலும் ஈழத் தமிழ் என்பது ஆங்கில மொழிக் கலப்பற்ற சுதேசத் தன்மையுடன் பல காலம் நீடித்தது. அண்மைக் காலமாக அந்த நிலை மாறியிருக்கின்றது. பிரித்தானிய ஆங்கிலக் கலப்பானது தமிழகத் தமிழ்ப் பேச்சு மொழியுடன் கலந்திருந்தாலும் பிரித்தானிய ஆங்கிலத்திலிருந்து விலகி இந்திய



ஆங்கிலம் என்று கூறுமளவுக்கு ஆங்கிலம் கூட இந்தியாவின் தனித்தன்மையுடன் வளர்ந்தது. அதுவே ஈழத்தவர்களுக்குள்ளும் ஊடுருவியுள்ளது. ஆரேஞ் (ஒரேஞ்), ஜார்ச் (ஜோர்ச்), டார்ச் லைற் (டோர்ச் லைற், ரோர்ச் லைற்), ஜாமீன் (பிணை), புகார் (முறைப் பாடு), நர்ஸ் (நேர்ஸ் - தாதி) எனப் பல சொற்களில் மாற்றங்களை ஈழத் தமிழ் பெற்றுக்கொண்டிருக்கிறது.

குறிப்பாக ஆங்கிலத்தில் ஓ (O) என்பதன் உச்சரிப்பை இந்தியத் தமிழர்கள் ஆ என்று உச்சரிக்கிறார்கள். அத்தோடு நாம் அப்பிள் என்பதை அவர்கள் ஆப்பிள் என்கிறார்கள்.. ஆங்கிலத்தில வை (Y) என்பதை வொய், ஒய் என்கிறார்கள். எச் (H) என்பதை ஹெச் என்கிறார்கள். அவர்களின் இந்த மாற்றங் களை இங்கு சாதாரண மக்களைவிட ஊட கங்கள் பயன்படுத்திவருவதுதான் அதிக மாக இருக்கிறது. தன்னிச்சையாகத் தமது தமி ழில் விருத்தி காணாத நிலையும், இந்திய நக லெடுக்கும் நிலையுமே இதை அதிகப்படுத்து கிறது.

**பேச்சு வழக்கு**

ஜாக்கிரதை (கவனம்), ஜாலி (சந்தோசம், மகிழ்ச்சி), லாரி (லொறி), ஜெயித்தல் (வெற் றியடைதல்), "கெத்தா வாழனும்னு ஆசப் பட்டோம் முடியல", "பாதிக்காலம் போய் டிச்சு..." "நம்மகிட்ட செற் ஆகும்னாங்க" குடிக் கனும், படிக்கனும், எடுக்கனும், ரொம்ப, கறி அள்ளி வைடி, நைட்டு புள்ளா என இந்தி யத் தயாரிப்புக் கார்ட்டூன்களைப் பார்க்கும் சிறார்கள் தொடங்கி இந்தியத் தொலைக் காட்சித் தொடர்களை இரசிக்கும் பெரியோர் வரை பல சொற்கள் பேச்சுமொழிக் கலப்புக் குள் ஊடுருவிவிட்டன. இதையே எழுத்து வழக்கிலும், முகநூல், கீச்சகம் போன்ற தளங் களிலும் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். குறிப்பு என்று சொல்லும் பழக்கமுள்ள நிலை மாறி ஜாதகம் என்று சொல்லும் நிலை அதி கரித்திருக்கிறது. வளைகாப்பு, சீமந்தம் என் கிற நடைமுறைகள் போருக்குப் பின்னபான காலத்தில் அதிகம் பிரபலமாகியிருக்கின்றன. இவ்வாறாகப் பல கோணங்களிலும் தனது தனித்துவத்தை இழந்து தென்னிந்தியக் கலப்புக்குள்ளாகிச் சிதைந்துகொண்டிருக் கிறது ஈழத்தமிழ்.

இந்திய மற்றும் தமிழகத் தொடர்புகள் மூலமே ஈழத்தின் கலை, கலாசாரம், பண் பாடு, மொழி ஆகியன வளர்ச்சியடைகின்றன என்று சொல்லிக்கொள்ளும் ஈழத்தவர்கள் தமது நிலத்துக்கென்றொரு சுதேசத்தையும் அடையாளத்தையும் மொழியில் கொண்டி ருக்கத் தவறி வருகின்றனர். புதிய தலைமு றைகள் இந்திய மற்றும் வேற்று மொழிகளை அதிகம் உள்வாங்கி வருகின்றன. நிலமை இவ் வாறே சென்றால் வருங்காலத்தில் ஈழ மற் றும் யாழ்ப்பாணச் சுதேச மொழி வழக்காறு களை அதிசயக் கண்கொண்டு பார்க்கும் நிலையே ஏற்படும்போல் தெரிகிறது.



# திருக்கை வறை

கடல்வாழ் மீன்களில் வித்தியாசம் மிக்கது திருக்கை மீன். திருக்கை மீனின் உருவம் மாத்திரமல்ல அதன் தசையும் ஏனைய மீனினங்களில் இருந்துவேறுபட்டது. திருக்கை மீனை உண் ணும்போது உடல் குளிர்ச்சியடையும், தேகச் சூடு தணியும் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. திருக்கை மீனைச் சமைப்பதும் அதைச் சமையலுக்குத் தயார்ப்படுத்துவதும் ஏனைய மீனினங் களை வெட்டித் துப்புரவு செய்வதிலிருந்து வேறுபட்டது. இலகு வாகக் கடிபடக்கூடிய முட்களைக் கொண்டிருப்பதால் திருக்கை மீனின் முட்களை நீக்கத் தேவையில்லை. இத்தகைய காரணங் களால் திருக்கை மீனைச் சமைப் பதும், உண்பதும் இலகுவாகச் செய்யக்கூடியதாக இருக்கிறது. திருக்கை மீனில் குழம்புக் கறி, வறை, கருவாடு ஆகியன தயா ரிப்பதே பரவலாக நிகழ்கிறது. இந்த வாரம் திருக்கை மீனில் வறை தயாரிப்பது எவ்வாறு என்று பார்ப்போம்.




**தேவையான பொருட்கள்**

திருக்கை மீன் - 1, தேங் காய்ப் பூ - பாதித் தேங்காயில் அரைவாசி, செத்தல் மிளகாய்கள் 8-10, சின்ன வெங்காயம் - 50 கிராம், சீரகம் - ஒரு மேசைக்கரண்டி, உள்ளி - 5 பற்கள், மிளகு தூள் - ஒரு தேக்கரண்டி, மஞ்சள் தூள், உப்பு, தேங்காய் எண் ணெய் ஆகியன தேவைக்கு ஏற்ப.

**எப்படிச் செய்வது...?**

திருக்கை மீனைக் கழுவி அதன் மேற்பரப்பு வழு வழுப்பு இலாமல் போகுமாறு சுத்தம் செய்யவேண்டும். சுத்தம் செய்ததும் அதைத் துண்டுகளாக்கிக் கழுவிச் சுத்தப்படுத்திய பின்னர் சட்டி ஒன்றுக்குள் இட்டு நீர், உப்பு ஆகியன சேர்த்து அவிக்கவேண்டும். அவித்தெடுத்ததும் வறை வறுப்பதற்குரிய தாச்சியை அடுப்பில் வைத்து தேங்காய் எண்ணெய்யை ஊற்றிச் சூடாக்கி அதில் சீரகம், நறுக்கிய சின்ன வெங்காயம், உள்ளி ஆகியன சேர்த்து வதக்கவும். பின்னர் அவித்து வைத்துள்ள திருக்கைத் துண்டங்களைப் போட்டு அகப்பையால் நன்கு மசித்துக் கொள்ளவும், கையோடு தேங்காய்ப்பூ, மஞ்சள் தூள், தேவைக்கேற்ப உப்பு, அரைத்தெடுத்த செத்தல் மிளகாய்கள் ஆகியவற்றையும் சேர்த்து மசிக்கவும். திருக்கைத் துண்டங்கள் நன்கு சிதிலமடையும் வகையில் மசித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு மசித்ததும் சிறிது நேரம் அடுப்பில் வைத்துப் பின் இறக்கவும். சுவையான திருக்கை வறை தயார்.

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

33





## தாலிக் காசுகளில் பிரித்தானியர்களின் தலை

திருமணத்தின்போது தாலி அணிந்துகொள்வது என்பது இந்துக்களின் பாராம்பரிய சடங்கு - சம்பிரதாயங்களில் முக்கியமானதாக இருந்து வருகிறது. அவர்கள் அணிகின்ற தாலிக் கொடியிலுள்ள தாலி எனக் குறிப்பிடப்படும் பகுதியில் பிள்ளையார், அம்மன் ஆகிய கடவுளர்களின் படங்களைப் பதித்து வணக்கத்துக்குரியதாகக் கொள்கின்றனர். தாலியின் இருபுறத்திலும் இருக்குமாறு தாலிக் கொடியில் தங்கக் காசுகள் பொருத்தப்பட்டிருக்கும். இத்தகைய தாலிக் கொடியைக் கௌரவமுள்ள ஒரு பொருளாகப் பேணிப் பாதுகாக்கிறார்கள். தாலி அணிந்து வெளியே செல்வதை மதிப்பு மிக்கதாகவும் கருதுகிறார்கள்.

நகைக் களவு நடந்த சந்தர்ப்பத்தில் அங்கு தாலிக் கொடி களவாடப்பட்டிருந்தால், ஏனைய நகைகளுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தைவிடத் தாலிக்கொடிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து அந்தரிப்பது வழக்கம். இதற்குக் காரணம் பெருந்தொகுதித் தங்கத்தை அது உள்ளடக்கியிருப்பது மாத்திரமல்ல. மதிப்புக்குரிய, வணக்கத்துக்குரிய, மரியாதைமிக்க பொருளாகத் தாலியைப் பலரும் கருதுவதும் காரணமாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தாலிக்கொடியில் அந்தத் தாலியைக் கட்டிய கணவரின் படத்தைப் பிரதிபலிக்கும் எதுவும் இருப்பதில்லை. தாலியின் இரண்டு பக்கங்களிலும் கோர்க்கப்படுகின்ற தங்கக் காசுகளில் பிரித்தானிய மன்னர்களின் தலைகள் பதிக்கப்பட்டிருப்பது பலருக்குத் தெரியாத சங்கதி. ஏன் அப்படித் தாலியில் பிரித்தானிய மன்னர்களின் தலை பதிக்கப்படுகிறது...?

பத்து ரூபா பணத்தைப் பத்து ரூபாக் காசு என்று எமது முன்னோர்கள் சொல்வதில்லை. ஒரு பவுண் என்றே அதைக் கூறினார்கள். அதற்கு இரண்டு காரணங்கள் காணப்பட்டன. பிரித்தானிய நாணயம் ஸ்ரேலிங் பவுண் என்பதால அதில் வரும் இறுதிச் சொல்லான பவுன் என்பதைக் கூறுவது. மற்றைய காரணம், பிரித்தானியர் இலங்கையைத் தமது காலணியாதிக்கத்தின் கீழ் வைத்திருந்தபோது ஒரு பவுண் தங்கத்தின் விலை சில காலம் வரை நீட்சியாகப் பத்து ரூபாவாகவே இருந்தது.

இந்தப் பின்னணியிலேயே தாலிக் கொடியில் பிரித் தானிய மன்னர்களின் தலைகள் பதித்த தங்கக் காசுகளும் பொருத்தப்பட்டன. தாலிக் கொடியைச் செய்யும் பொற்கொல்லர் அந்தக் காலத்தில் பிரித்தானிய மன்னர்களின் தலைகள் பதித்துத் தயாரிக்கப்பட்டிருந்த தங்கக் காசுகளுக்கு ஒரு வளையத்தைப் பொருத்தி இலகுவாகத் தாலிக்கொடியில் கொழுவினார்கள். பின்னர் அதுவே நடைமுறையாகி இன்று வரை தொடர்கிறது.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781